M. A. A., Series No. I.

1906

MANGALAM.

(A Social Drama In Tamil).

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 DEC 1917
MADRAS

மங்களம்.

1245

PUBLISHED BY
Young Men's Amateur Association,
MADURA.

PRINTED AT THE
PADMALAYA PRESS, MADURA.

0-,3x
N17
176138

d. 1917. Price As. 4.

*விவேகோதயப் பிரசுரங்கள்.

மௌனதேசிகர்:—அபிநய சாஸ்திரம் பற்றிய ஓர் ஹாஸ்யநாட[illegible] ஆரம்பம் முதல் கடைசி வரை விடாநகைப்பை விளைவிக்கும். "விவே[illegible]தயம்" பத்திராதிபர் ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையர் இயற்றியது. [illegible]ருஷோத்ஸவ காலங்களில் விநோதார்த்தமாக ஒரேமணி நேரத்தில் [illegible]க்க கூடியது விலை 0—4—0.

வள்ளுவர் நேரிசை: மூலமும் கதையும். (குறிப்புரையுடன்) திருவள்ளுவரது திருக்குறள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கதை[illegible] குறிப்பிட்டு, சோழவந்தானூர் மகாவித்வான் ஸ்ரீமத் அரசஞ்சண்முக[illegible] வெண்பாவாகப் பாடியது இது. இவ்வெண்பாக்கட்குக் குறிப்பு[illegible] அவற்றுள் அடங்கிய கதை விரி விளக்கமும் ஸ்ரீமத் ம. கோபாலகி[illegible]ணையர் எழுதியுள்ளார். முதல் 100 செய்யுட்கள் கொண்ட முதற்பா[illegible] விலை 0—10—0.

சாணக்ய சாகஸம்:—ஸ்ரீமதி பாலம்மாள் இயற்றியது. இனிய எ[illegible] தமிழ் நடையில் சர்வ சாமானியர்க்கும் விளங்குமாறு எழுதப்பட்டுள்ள[illegible] விலை ரூ 1—4—0.

கபலாவதி:—K. வேங்கடராமையர் எழுதி ஸ்ரீமத் ம. கோபாலகிரு[illegible]ஷ்ணையர் திருத்திப் பதிப்பித்தது. விலை அணா 0-10-0.

*விவேகோதயம்: ஓர் மாதாந்த பத்திரிகை. வருடசந்தா ரூ. 2.

ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையர் இயற்றிய அருப்பொருட்டிரட்டு.

முதற் பாகம்.

இது தோத்திரப்பாக்களும், வாழ்த்துக் கவிகளும், இரங்கற் பாக்களும் பெரியோர்களின் ஜீவியசரித்திரங்களும், கொண்ட செய்யுள் நூல். 55 விஷயங்கள் கொண்டு, 8 பிரபல கனவான்களுடைய படங்களுடன் விளங்கும் இது சுமார் 100 பக்கங்கள் கொண்டது. விலை. ரூ. 0—10—0.

இரண்டாம் பாகம்.

இது ஆங்கிலப் புலவர்கள் செய்துள்ள பாடல்கள், நீதிக் கதைகள், நன்மொழிகள், முதலியவற்றின் பொருள் சிறிதும் குன்றுவாறு விஷயத்திற்கேற்ற பாவினத்தில் நிறுத்த சொல்லும் குறித்த மொழியும் கொண்டு மொழி பெயர்க்கப்பட்டுள்ள செய்யுள்நூல். ஆங்கிலச் செய்யுள் மூலமும் நேருக்குநேர் வைத்து அச்சிடப் பட்டுளது. 47 கவிரத்னங்களின் மொழிபெயர்ப்பச் செய்யுட்கள் கொண்டு சுமார் 140 பக்கங்கள் உள்ள இதன் விலை ரூ. [illegible]—12—0.

மூன்றும் பாகம்.

இயற்கைப் பொருள்கள், சரித்திரங்கள், நீதிவிஷயங்கள், முதலியவற்றைப் பற்றிய அரிய பெரிய வியாசங்கள் கொண்டது. இது உபந்யாஸம் செய்ய விரும்புவோர்க்கும், வியாசம் எழுதக் கற்போருக்கும், உபாத்தியாயர்களுக்கும், தமிழ்ப் பண்டிதர்கட்கும், ஸ்திரீ, சிறுவர்கட்கும் பெறுதற்கரிதான பேறுகும். சகல வியாச புத்தகங்களிலும் மிகவும் பெரிதும், அரிய விஷயங்கள் கொண்டதும், விலைசரசமானதும் இதுவே. சுமார் 400 பக்கங்களடங்கியுள்ள இதன் விலை ரூ. 1—4—0. ☞ மூன்று பாகமும் சேர்த்து [illegible] ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

[illegible]" ஆபீஸ், மதுரை

Y. M. A. A. Series No. I.

MANGALAM.

(A Social Drama In Tamil)

Medal Play for the Year

1916—1917.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 DEC 1917
MADRAS.

PUBLISHED BY

The Young Men's Amateur Association,

MADURA.

PRINTED BY

Padmalaya Press, Madura.

Copy-right *Regd.* 1917. PRICE AS. 4

1946
894.8112
176138

Notice.

The play should not be staged without the previous permission of the secretaries, and every application for such permission should be accompanied by a fee of Rs. 2. each time the play is staged.

V. Kathirvadivelmurugaiya,
G. Subramania Ayyar,
Hon. Secretaries.

AUTHOR'S NOTE.

Of the three forms of Tamil literature 'IYAL', 'ISAI' and 'NATAKAM' the author has a great liking for the last. His interest in it was impelling him to write a 'Drama'. While such was the condition of the author's mind, the YOUNG MEN'S AMATEUR ASSOCIATION, MADURA, offered a gold medal for the best Social play. The author naturally offered himself as one of the competitors and this work is the result. This being the maiden attempt of the author, he thinks, that it cannot be free from errors, grammatical or idiomatic, and he relies on the indulgence of the public to pardon him.

The author conveys his sincere thanks to the *Y. M. A. A., Madura*, for the favour it has done him in publishing this work. He also takes this occasion to wish a long life to this Association, which, unlike other AMATEUR ASSOCIATIONS in MADURA, has for one of its admirable objects the fostering of the *Tamil Dramatic Literature*.

Madura,

The Author.

சாற்று கவி.

மதுரைக் காலேஜ் தமிழ் பண்டிதரும்,
மாணவர் செந்தமிழ்ச் சங்கத் தலைவரும்,
விவேகோதயப் பத்திராதிபருமான,

ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் கூறியது.

கற்பவர்க்கும் கேட்பவர்க்கும் வரசுல்கத்
தீமையெலாம் காட்டி, மிக்க
நற்குணத்தோர் மனமுருக, மங்களப் பேர்
நாடகத்தை நன்கியற்றித்
தற்குறிக ரில்மதுரை வாலிபர் சித்
யாதூர சங்கமீயும்
பொற்பதக்கம் பெறற்குரிய ஞத்திகழ் வோன்
சங்கரப்பேர்ப் புலமை யோனே.

INTRODUCTION.

We have much pleasure to introduce this as the successful one in the competition held by the *Young Men's Amateur Association, Madura,* for the best social play. This was declared to be the best of the eight manuscripts received.

2. The manuscripts were examined by Messrs. *R. S. Narayanaswami Ayyar B.A., B.L., Editor of 'Kalvi'*, a tamil monthly magazine, *P. R. Nagaswami Ayyar B. A., B. L.*, and Pandit *M. Gopalakrishna Ayyar, Editor of 'Vivekothayam'*. We confess that the gentlemen had to be put to much trouble and inconvenience in the work and we take this occasion to tender our heartfelt thanks to them.

3. We also take this occasion to offer our gratitude to Pandit *M. Gopalakrishna Ayyar*, who, amidst his other important works, was able to find time to assist us in getting up the work for publication.

4. Further our obligations are due to the Proprietor *Padmalaya Press, Madura,* who helped us in bringing out the work in so short a period and lastly to the *author* himself, who not only assigned all his rights to the work to the association, but also assisted us in various ways amongst which the passing of proofs which otherwise would have caused us considerable inconvenience.

THE Y. M. A. A.,
MADURA.

V. Kathirvadivelmurugaiya,
G. Subramania Ayyar,
Honarary Secretaries.

OFFICE OF THE REGISTRAR OF ...
1917
MADRAS

INSCRIBED

"To the memory of My Beloved Mother"

"தந்தை தாய்ப் பேண்."

மங்களம்.

நாடக பாத்திரர்.

நரசிம்மையர்	தாசில்தார், கள்ளக்குறிச்சி
லட்சுமி அம்மாள் ...	நரசிம்மையர் மனைவி.
மங்களம்	நரசிம்மையர் பெண். (கோபாலன் மனைவி.)
சுப்பையர்	நரசிம்மையர் சம்பந்தி.
கோபாலன்	சுப்பையர் புத்திரன். (மங்களம் புருஷன்.)

சாஸ்திரிகள், வைத்தியர், போலீஸ் இன்ஸ்பெக்டர், சேவகர்கள் முதலானோர்.

இடம்:—பெரும்பான்மை கள்ளக்குறிச்சியிலும்; சிறுபான்மை காஞ்சிபுரத்திலும், திருக்கோவிலூரிலும், அதனை அடுத்த காட்டிலும் திருவண்ணாமலையிலும்.

மங்களம்.

முதல் அங்கம்.

காட்சி ஒன்று.

இடம்:— கள்ளக்குறிச்சியில் தாசில் நரசிம்மையரவர்கள் வீட்டில் கச்சேரி அறை. காலம்:—இரவு.

தாசில் நர:—மங்களம்! (என்று தன் பெண்ணைக்கூப்பிட்டுக்கொண்டே அறைக்குள் நுழைகிருர்.)

மங்களம்:—ஏன் அண்ணு! (மங்களமும்லட்சுமிஅம்மாளும் அறைக்கு வருகிருர்கள்.)

தாசில் நர:— மங்களம்! உன் அம்மங்காளுக்குக் கலியாணமாம் வருகிறமாதம் 7ம் தேதி.

மங்களம்:—நாம் எல்லோரும் போகவேண்டாமா அண்ணு?

லட்சுமி அம்மாள்:-எங்க அண்ணு குழந்தைக்கி இன்னும் எட்டு வயசுகூட ஆகல்லே. அதுக்குள் கலியாணம் நடக்கிறது. நம்ம குழந்தைக்கோ வயசு பதிஞெண்ணுறது. இன்னும் கலியாணமென்கிற பேச்சே காணும். நானும் மூணுவருஷமாத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நம்மபேச்சை யார் கேட்கப்போரு?

தாசில்:—பார்த்தாயா? உனக்கு நான் எத்தனையோ தரம் சொல்லியும் நீ உன் பழையகதையை ஆரம்பித்து விட்டாயே. எப்படியாவது இந்த வருஷம் கலியாணம் செய்தபிறகு மறு ஜோலிபார்க்கிறேன்.

லட்:—ஆமா! போன வருஷம்கூட இப்படித்தாஞ் சொன்னேள். அதுபோலத்தானே இந்த வருஷமும்? ஜமாபந்தி முடிஞ்சவுடன் செய்றேன்னு சொல்லப்போறேள்.

தாசில்:—நான் நேற்றே ரஜாவுக்கு எழுதிக்கொடுத்திருக்கிறேன். கட்டாயம் கிடைத்துவிடும். இந்தவருஷம் கலியாணம் நடத்திவிட்டுத் தான் மறுகாரியம் பார்ப்பேன்.

லட்:—போன வருஷம் ஜமாபந்தி முடிஞ்சவுடன் ரஜா கிடைத்த தென்னு புறப்படும்போதுதான் கலெக்டர் வந்திருக்கான் இன்னு சொல்லி, ரஜாவில் போகாமல் இருந்துட்டேள். அதேமாதிரி இந்த வருஷமும் ஆரேனும் வந்தார்களென்னு சொல்லப்போறேள். ஆனால் போனவருஷம் மாதிரி இனி நம்ம குழந்தையை வச்சுக்கொண்டிருக்க முடியாது. அடுத்த வருஷம் பெரியவளானாலும் ஆயுடுவள். அப்புறம் நம்மை ஜாதிப்ரஷ்டம் தான் பண்ணிடுவா. நான் முட்டிக்கொண்டு என்னசெய்கிறது? அவாவாளுக்குத் தெரியவேண்டும்.

தாசில்:—இந்த வருஷம் அப்படிக்கெல்லாம் இருக்க மாட்டேன். எனக்கு வேலையிருக்கிறது நீ போ.

லட்:—ஆமா, எப்போ பார்த்தாலும் வேலே வேலே இன்னு தான் சொல்றேள். குழந்தையை யாருக்குகொடுக்கப்போறேளென்னு அந்த ரங்கமாய்க் கேட்கவந்தால், அதுக்கு பதில் இல்லே. அதைப்பற்றி உங்களுக்கு யோசனையே இல்லே; ஜமாஷ், பணவசூல் காலம், ஜமாபந்தி, அப்புறம் கலெக்டர் வந்திருக்கார், கஜனு கலெக்டர் வந்திருக்கார்— இன்னு இப்படியே போன வருஷம் பூராவும் தள்ளியாச்சு. நம்ம குழந்தைக்கு இப்போ முதலே பார்த்து ஒரு நல்ல வரன் தேடிக் கொடுத்தால் தானே, தேவலே. கண்ணக் கசக்காமல் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்.

தாசில்:—சரி-நீ யாருக்குக்கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறாய்?

லட்:—[சந்தோஷத்துடன்] அப்படிக் கேளுங்கோ! எங்க அண்ணா பிள்ளை சீனிவாசனுக்குக் கொடுத்தா நல்லது. எங்க அண்ணாவுக்கோ அவன் ஒரே குழந்தை. நூறு காணி நிலமிருக்கு. மாடி வீடு நாலு இருக்கு. தோப்பு துரவு எல்லாம் இருக்கு. நம்ம குழந்தை போன இடத்தில் கஷ்டப்படாமல் சாப்பிட்டுக்கிண்டு இருக்கும்.

தாசில்:—எல்லாம் சரிதான். படிப்புத்தான் பூச்சியம். மெட்ரிகிலேஷனுக்கு மூன்று வருஷம் போயும் தேறுகிற வழியைக்காணேம். ரொம்ப புத்திசாலி! கட்டாயம் கொடுக்க வேண்டியது தான்!

லட்:—அவனுக்குப் படிச்சு என்ன ஆகணும்? என்னை வந்து நீங்கள் நன்னு படிக்கறேளென்னு தான் கொடுத்தா. இப்போ நான் அடைகிற சுகமென்ன? ஏழெட்டு வருஷமா ஊர் ஊராய்ச்சுத்துவது தான் கண்ட பலன்.

தாசில்:—உனக்கு வெகு குறைச்சல்தான்! எவனுவது ஒரு மிராசுதார் வீட்டில் கொடுத்திருந்தால் சாணி தட்டுகிறதும், அடுப்பங்கரை மெழுகுகிறதுமாய் இருப்பாய். அப்படியில்லாமல் இப்பொழுது பரிசாரகன் சமையல் செய்து போடுகிறதால்—என்? இதுவும் சொல்லுவாய்! இன்னமும் பேசுவாய்!.

லட்:—வீட்டில் பரிசாரகன் வச்சூட்டா எனக்கு வேறே காரியமில்லை போலேயிருக்கு. வீட்டுக்காரியத்தைக் கவனித்திருந்தால் தெரியும். ஏன்? சாணி தட்டுகிறதில் என்ன குறைந்து போச்சோ? தெரியவில்லை. ஸம்ஸாரி வீடு இன்னு இருந்தா எல்லாம் தான் செய்யணும். வேறே ஆருக்காவது செய்றேமோ! அதனுல் கேவலமா? வேலை செய்துவிட்டுச் சௌக்கியமாச் சாப்பிட்டுக்கிண்டு ஒரே இடத்தில் இருக்கலாம். இப்படி உத்தியோகப் பிழைப்பைக்கொண்டு ஊர் ஊராய்த் திண்டாட வேண்டாம்.

தாசில்:—அப்படியானுல் உன்னுடைய அண்ணு குழந்தைக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று சொல்.

லட்:—ஆமாம்—

தாசில்:—அது மாத்திரம் ஒரு நாளும் முடியாது. இன்னெரு தரம் அந்தப்பேச்சே பேசாதே. நம் ஊர் அடுத்தகத்து சுப்பையர் பிள்ளை கோபாலனுக்குத்தான் கொடுக்கப் போகிறேன். அவன் நன்ருக வாசிக்கிறுன். இந்த வருஷம் பி. ஏ. பரிட்சையில் நிச்சயமாய்த் தேறுவான். மேலும் கொஞ்சம் பூஸ்திதியும் இருக்கிறது. ஆனல் ரூபாய் விஷயந்தான் இன்னும் நிச்சயப்படவில்லை. அநேகமாய்

அந்த விஷயமும் முடிவாகி இன்னும் இரண்டு நாளைக்குள் பதில் கடிதம் வந்து விடும்.

லட்:—ஆமா, இந்த நாளிலே சாதாரணமாய்ப் படிக்கிற பிள்ளைகளுக்கே ஆயிரம் இரண்டாயிரம் வேணுமென்று கேட்கிறா. கோபாலனோ உங்கள் அவ்வளவு வாசிக்கிறானும். ஏன் அவாள் மூவாயிரம் ரூபாயில் ஒரு காசுகூட குறைக்கமாட்டா! எங்க அண்ணா பிள்ளைக்குக் கொடுத்தால் ரூபாயே கொடுக்கவேண்டாம். எவ்வளவோ சந்தோஷத்துடன் பண்ணிக்கொள்வா.

தாசில்:—அந்தப்பேச்சு மறுபடியும் என்னத்திற்கு? எப்படியும் இந்த வருஷம் கட்டாயம் கலியாணம் செய்து விடுவேன். அவர்கள் எவ்வளவு ரூபாய் கேட்டாலும் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் நான் போட்ட கடிதத்துக்கு இன்னும் பதில் வரவில்லை. ஏதோ ஏறுகிறது, குறைகிறது, இதெல்லாம் பார்த்து முடியுமா? கட்டாயம் கோபாலனுக்குத்தான் நம் குழந்தையைக்கொடுக்க வேண்டும். அதுதான் எனக்குத் திருப்தி.

லட்:—எப்போதும் உங்களுக்கு இந்த முரண்டு தான். சரி! நீங்க சொல்ற படியே இருக்கட்டும். மாப்பிள்ளைக்குக் கையில் ரூபாய் மூவாயிரம். அதற்குத் தகுந்தபடி கலியாணத்திற்கும் செலவு செய்ய வேண்டாமா? அதென்ன இரண்டாயிரத்துக்குக் குறையப் போகிறதா? மொத்தம் ரூபாய் ஐயாயிர மாச்சு. இன்னிக்கெல்லாம் உங்களுக்கு அர்ப்பத்துநட்டில் இருப்பது ரூபாய் நாலாயிரம் தானே? பாக்கி ரூபாய் ஆயிரம் கடன் வாங்கி செய்யப்போறேளா? (தாசில் விழித்து பார்க்கிறார்) என்னைப் பார்த்தா? உள்ள கணக்கைத் தானே சொன்னேன். ஏன்? அவ்வளவு ஆகாதா?

தாசில்:—ரொம்ப புத்திசாலிதான். உனக்கு ரொம்ப கணக்கு வழக்குத்தெரியும். இப்பொழுது யார் அந்த ரூபாய் பூராவும் எடுக்கப் போகிறார்கள்? ரூபாய் மூவாயிரம் எடுத்து அதற்குள் எல்லாச் செலவையும்செய்து முடிக்கிறேன் பார்!.

லட்:—மூவாயிரம் ரூபாய் மாப்பிள்ளைக்கு மொத்தமாய்க் கட்டிக் கொடுக்கிறதற்கு ஆச்சு! சீர் வகையராச்செலவு வேறே இருக்கு! சாப்பாட்டுச் செலவும் வேறே இருக்கு. இதெல்லாம் சொன்ன உங்களுக்குக் கோபம் வரும்.

தாசில்:—[கோபமாய்] உனக்கு ஏன் இந்தக்கவலை? உன் வேலையை நீ பார் போ? [லட்சுமி அம்மாள் வருத்தத்துடன் போகிருள்.] (சற்று தாமதித்து) வீணில் அவளைக் கோபிப்பானேன்? அவள்சொல்வதும் சரியாகத்தான் இருக்கிறது. ரூபாய் ஐயாயிரம் இல்லாமல் காரியம் முடியாது தான். இந்த எட்டுவருஷமாக நானும் எவ்வளவோ கஷ்டப்பட்டு ரூபாய் நாலாயிரம் சேர்த்திருக்கிறேன். இதற்கு மேல் ரூபாய் ஆயிரம் வேறே கடன் வாங்கவேண்டியிருக்கிறது. அப்பப்பா! இது நம்மால் சாத்திய மில்லை. சுப்பையர் ரூபாய் ஆயிரத்துக்குச் சம்மதித்தால் மட்டும் தான் கோபாலன் ஆசையெல்லாம். நானே தாசில் உத்தியோகம் பண்ணுகிறேன். இருக்கிறது ஒரே பெண். அந்தப்பெண்ணுக்குத் தகுந்தபடி கலியாணம் செய்ய நான் இப்படி மயங்கினல் ரூபாய் முப்பது நாற்பது சம்பளம் வாங்குகிற கீழ் உத்தியோகஸ்தர்கள் என்னபண்ணுவார்கள்? ஆனல் அதுவும் சொல்வதற்கில்லை. ஏன்? திருக்கோவிலூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணையர் போன வருஷம் தன் பெண்ணுக்குக் கலியாணம் செய்தார். நானே கண்ணுலே பார்த்தேன். அங்கே நடந்த ஊர்கோலத்திற்கும் சதிர்க் கச்சேரிக்குமட்டுமே ரூபாய் ஆயிரம்வரை ஆயிருக்குமே! இது தவிர மாப்பிள்ளைக்கு மட்டும் கையில் ரொக்கம் ரூபாய் இரண்டாயிரம் கொடுத்திருக்கிருர். ஆனல் அவர் மாதம் ரூபாய் ஐநூறுக்குமேல் சம்பாதிக்கிருர். நமக்குக் காய்கறி முதல் சம்பளத்திலிருந்தே வாங்க வேண்டியிருக்கிறது. கிருஷ்ணையர் மாதிரி நானும் சம்பாதிக்க முடியாதா? சீச்சீ! அந்த மாதிரி சம்பாதித்து வயிற்றை வளர்ப்பதைக் காட்டிலும் எங்கேயாவது பிச்சை எடுத்துப் பிழைக்கலாம். இதெல்லாம் சொல்லி என்ன பிரயோஜனம்? ஒன்றும் சரியாய் வராவிட்டால் சீனிவாசனுக்குக் கொடுக்க வேண்டியது தான். பிராப்தப்படி நடக்கிறது. [போகிருர்.]

முதல் அங்கம்.

காட்சி இரண்டு.

இடம்:—தாசில் நரசிம்மையர் வீட்டில் மற்றோர் அறை

காலம்:—இரவு.

லட்சுமி அம்மாள்:—[மனோவருத்தத்துடன் தனக்குள்.] நான் ஏன் அவாளிடத்தில் இவ்வளவு தூரம் பேசணும். சும்மாயிருப்போம் இன்னும் மனசு கேட்கல்லே. பிள்ளைகளைப்பற்றிய கவலைப்பெத்தவாளுக்குத் தெரியுமின்னு இருந்தாலும் என்னைப்போல் அவாளுக்கு இருக்குமோ? அதிலும் பொண் குழந்தைகளைப் பத்தியகவலே தாயாருக்குத்தான் அதிகம். அதனால் தான் அவ்வளவு சொல்ல நேர்ந்தது. அதுக்காக இவ்வளவு கோபித்துக்கொள்ள வேணுமா? நான் நினைச்சதெல்லாம் என் தமபன் பிள்ளைக்குக் கொடுத்தா அதிக ரூபாய் செலவாகாததும் தவிர குழந்தையும் பசியாமல் சாப்பிட்டுக்கொண்டிருக்குமே இன்னுதான். படிப்பை நம்பிப் பெண்ணைக் கொடுப்பதுன்னு என்னமோ எனக்குப் பிடிக்கல்லே. படிச்சு உத்தியோகம் பண்றவா என்ன வாரிக் கொட்டிவிட்டா? ஆயிரம் படிப்பிருந்தாலும் சொத்து இல்லாவிட்டால் என்னபிரயோஜனம்? ஒருவரைப்போய்ச்சொல்லுவானேன்? இப்போ என்னுடைய ஸ்திதி யென்ன? மாசம் முதல்தேதி கையில் சம்பளம் வந்து காலக்ஷேபம் நடக்கவேண்டியிருக்கு. பத்து நாள் தலேவலிச்சு படுக்கையில் படுத்தால் வீடு திண்டாடிப்போகும். எதுக்கும் கொஞ்சம் சொத்துவேண்டாமா? இதைத்தானே சொன்னேன். இதில் என்ன குத்தம். தான் உத்தியோகத்தில் இருப்பதினுல் தன்னைப்போல் உத்தியோகஞ் செய்யக்கூடியவராப்ப் பாத்துக் கொடுக்கணுமின்னு அவாளுடைய எண்ணம். எப்படியும் இந்த வருஷம் குழந்தைக்குக் கலியாணம் ஆய்த் தீரவேணும். அவாளுக்குத் தெரியாத விஷயமா? குழந்தையின் க்ஷேமத்தை அவாளும் என்னைப்போல் கவனிக்கக்கூடியவாதானே! ஏதோ! அம்பிகையின் செயல்தான்! அம்பிகை தான் குழந்தையை நல்ல இடத்தில் சேர்க்க வேண்டும்.

முதல் அங்கம்.

காட்சி மூன்று.

இடம்:—தாசில்தார் வீட்டுக்கச்சேரி அறை. காலம்:— காலை

(தாசில் நரசிம்மையர் உட்கார்ந்து கடிதங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார். சேவகன் தபாலாபீசிலிருந்து கடிதங்கள்கொண்டுவந்து கொடுக்கிறான். அதில் சுப்பையர் கடிதம் இருக்கக்கண்டு அதை வாசித்து ஸந்தோஷத்துடன்)

தாசில்:—மங்களம்! [லட்சுமி அம்மாள் வருகிறாள்.]

லட்:—[புன் சிரிப்புடன்] என்ன விசேஷம்? ஏது ரொம்ப சாந்தமாயிருக்கேள்?

தாசில் :—சாந்தமட்டுமா? சந்தோஷமுந்தான்.

லட் :—அப்படியென்ன சந்தோஷ மிப்போ!

தாசில் :—சுப்பையரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. எனக்கும் லீவும் கிடைத்து விட்டது.

லட் :—காயா ! பழமா ?

தாசில் :—எல்லாம் பழந்தான் ! வாசிக்கிறேன் கேள்.

(கடிதத்தை வாசிக்கிறார்).

உ காஞ்சி,
க்ஷேமம். 17—2—1905.

மகா-ா-ா-ஸ்ரீ தாசில் நரசிம்மையர் அவர்களுக்கு நமஸ்காரம். உபயக்ஷேமம். தங்கள் கடிதம் வந்து பார்த்துக்கொண்டேன். தங்களுடைய குழந்தை சௌபாக்கியவதி மங்களத்தைச் சிரஞ்சீவி கோபாலனுக்குக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதந்தான். ஆனால் தாங்கள் முன் எழுதியபடி ரூபாய் இரண்டாயிரத்தையும் இப்பொழுதே கொடுத்தால் சௌகரியமாயிருக்கும் என்று எண்ணினேன். தாங்கள் இப்பொழுது பூரா ரூபாயும் கொடுக்க முடியாதென்றும், ஆயிரம்

ரூபாய் உடன் கொடுப்பதாகவும் சாந்திமுகூர்த்த காலத்தில் பாக்கி ரூபாய் கொடுப்பதாகவும் எழுதியிருக்கிறீர்கள். தங்கள் சௌகரியப் படியே செய்கிறது. கலியாணம் இந்த வருஷம் ரஜாவில் நடத்த எங்களுக்குச் சம்மதம். ஜாதகம் பார்த்ததில் இந்த ஜாதகம் மேலென்று சொல்லுகிறார்கள். பெரியவர்களிடத்தில் கலந்து கொண்டு முகூர்த்தம் வைத்து எழுதவும். தாங்கள் சொன்னபடி ரூபாய் அனுப்பினால் மிகவும் சௌகரியமாயிருக்கும். சீர் வகையரா மற்ற விஷயங்கள் உங்களுக்குத் தெரியாதது இல்லை. எல்லா விஷயத்திற்கும் தங்கள் கடிதம் எதிர்பார்க்கிற

தங்கள் நண்பன்

சுப்பையர்.

என்ன? சம்மதந்தானே?

லட் :—என்னைக்கேட்பானேன்? உங்களுக்கு ஸம்மதம் எதுவோ, அது தான். ஆனா—

தாசில் :—மறுபடி ஆரம்பித்து விட்டாயா—

லட் :— ஒண்ணும் சொல்லல்லையே-நான் அன்னிக்கே சம்மதமின்னு சொல்லி விட்டேனே!

தாசில் :—ஆ-இது தான் சமர்த்து-சரி. உன்காரியங்களை பார்க்கப் போ-நான் சாஸ்திரிகளை வரவழைத்து முகூர்த்தம் பார்க்கச்சொல்லுகிறேன்—

லட் :—ஆமா-உங்களுக்கோ ரஜாக்கிடைச்சு விட்டதுன்னு சந்தோஷமாச்சொன்னேள். மேஜைமேல் இருக்கிற கடிதாசிகளைப் பார்த்தால் ரொம்ப பயமாருக்கே.

தாசில்:—வாஸ்தவந்தான்-எனக்குப் பதிலாக வருகிறவர் வந்து வேலை ஒப்புக்கொண்ட பிறகு தானே என் வேலை ஒழியும். மேலும் நான் பார்த்த விஷயங்களை நானே பைசல் செய்வதுதான் சரி. வருகிறவர்க்கு வேலை வைத்து விட்டுப்போனால் அவர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்.

[சாஸ்திரிகள் வருகிறார்.]

தாசில் :—வாருங்கள் ! சாஸ்திரிகளே ! வரவேண்டும். இப்பொழுதுதான் உங்களுக்குச் சொல்லி அனுப்பவேண்டுமென்றிருந்தேன். தாங்களும் வந்து விட்டீர்கள்.

சாஸ் :—ஓகோ ! குழந்தைக்குக் கலியாணம் நிச்சயமாகிக் கடிதம் வந்திருக்கிறதோ ? பார்த்தீர்களா—

தாசில் :—(சந்தோஷத்துடன்) ஆமாம். இப்பொழுதுதான் கடிதம் வந்தது.

சாஸ் :—பார்த்தீர்களா ? ஜாதகத்தைப் பார்த்தவுடனே நான் என்ன சொன்னேன் ? கட்டாயம் நம்ம குழந்தைக்கும் அந்தப் பையனுக்கும் கலியாணம் நடந்துதான் தீருமென்று சொன்னேனல்லவா ? நம்ம குழந்தை நல்ல அதிர்ஷ்டசாலி. பையன் ஜாதகம் திவ்விய ஜாதகம்.

தாசில் :—விவாகத்தை சுப சீக்கிரமாக நடத்த வேண்டும். நல்ல முகூர்த்தமாக இந்த மாதத்திற்குள்ளேயே பார்த்து நடத்திவிடுவதாக உத்தேசித்திருக்கிறேன்.

சாஸ் :—அதற்கென்ன ? பேஷாய் நடத்திவிடலாம். (பஞ்சாங்கத்தை எடுத்துத் திருப்பித் திருப்பிப்பார்த்து) இன்றைக்கு நேர் பதினைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை திவ்விய முகூர்த்தம் இருக்கிறது சுக்கிரவாரம் ; கன்னியாலக்கினம்; அமிர்த கடிகை—

(மங்களம் வருகிறாள்)

தாசில் :—சரி அதுவும் சவுகரியமான நாள்தான். அந்தப்படியே சம்பந்தி சுப்பையருக்குக் கடிதம் எழுதிவிடுகிறேன். பெரியவாள் நீங்கள் இருந்து கலியாணத்தை விமரிசையாய் நடத்திவைக்க வேண்டும். மங்களம்! தாத்தாவுக்கு வெற்றிலை பாக்குக் கொண்டு வந்து கொடு.

சாஸ் :—சந்தோஷம் ! நான் வரட்டுமா ?

தாசில் :—ஆஹா ! அப்படியே. [சாஸ்திரிகள் போகிறார்]

லட் :—நாழிகை ரெம்ப ஆச்சே. சீக்கிரம் சாப்பாடு முடிந்தால் நான் காரியத்தைப் பார்க்கலாம்.

தாசில்:—சரி நீ போ. இதோ வந்து விட்டேன்.

[லட்சுமி அம்மாள் போகிறாள்.]

(சேவகன் வந்து சலாம் செய்கிறான்.)

தாசில்:—யாரடா அது? பாச்சாமியா வா? எண்டா காலமே முதல் எங்கடா தொலைந்து போயிருந்தாய்? ஏன்! நான் ரஜாவில் போகிறதினாலே இங்கே வேலை பார்க்கிறது அனுவசியம் என்று தோன்றுகிறதோ உனக்கு? உங்களை நம்பினால் கல்யாண காரியம் நடந்தால் போலதான். புது எஜமானன் வருகிற வரையில் இங்கே வேலை பார்க்கலாமடா.

பாச்சா:—இல்லங்கோ எஜமான் சிரஸ்தார் எஜமான்க என்னை ரயிலுக்குப் போகச்சொல்லி யிருந்தாங்கோ. அங்கே போயிட்டு வர நாளியாச்சு மாராஜ்.

தாசில்:—ரயிலுக்கா? யார் வந்தா?

பாச்—திருக்கோயிலூர் மாஸ்ரெட் எசமான் வந்தாங்க. கூட்டிக்கொண்டுவரப் போயிருந்தேன்.

தாசில்:—நல்ல வேலைதான். புது எஜமானை எதிர்கொண்டழைக்கப் போனாயோ? சரி. அம்மா ஏதோ சாமான்கள் வாங்கவேண்டுமென்று சொன்னாள். நீ போய் கேள் போ.

(சேவகன் போகிறான்)

முதல் அங்கம்.
காட்சி நான்கு

இடம்:—வெளி முற்றம் காலம்:— காலை

தாசில்தார்:— (உலாவிய வண்ணம்) என்ன செய்வேன்! குழந்தை மங்களம் பெரியவளாய் விட்டாள். கல்யாணமான வருஷத்திலேயே ரூபாய் மூவாயிரம் செலவழிந்து விட்டது. "வீட்டைக் கட்டிப்பார்; கலியாணத்தை பண்ணிப்பார்" என்று பெரியவர்கள் சொல்லும் பழமொழி சரியாய் விட்டது. போன வருஷம் சம்பளம் பூராவும் வருஷச்சீர் வகையராக்களுக்கே சரியாய் விட்டது. அதில் கொஞ்சம் மீதம் வைத்து ஆர்பத்நாட் கம்பெனியில் போடு

வோம் என்று ஆனமட்டும் பார்த்தேன்; முடியவில்லை. மாப்பிள்ளைக்கு மொத்தமாக ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தான் சாந்தி முகூர்த்தம் நடக்கும். இப்பொழுது நமக்கு இருக்கும் ஆஸ்தி யெல்லாம் ஆர்பத் நாட் கம்பேனியில் இருக்கிற ரூபாய் ஆயிரம் தான். ஒன்பது வருஷமாக உத்தியோகம் செய்து நான் பிழைத்த பிழைப்பு இவ்வளவுதான். என்ன செய்கிறது? சாந்தி முகூர்த்தச் சீருக்குக் குறைந்தது நம் அந்தஸ்த்துக்கு ஐந்நூறு ரூபாய் செல்லும். இதற்கு என்ன செய்கிறது? எங்கேயாவது கடன் வாங்கிச் செய்து போடலாமென்றால் அவர்களும் இன்ஜினீர் படிப்பு முடிந்த பிறகுதான் சாந்தி முகூர்த்தம் செய்யலாமென்று சொல்லுகிறார்கள். அதற்கோ இன்னும் ஒரு வருஷம் இருக்கிறது. எப்படியாவது செட்டாயிருந்து ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் சேர்த்து அடுத்த வருஷம் கட்டாயம் சாந்தி முகூர்த்தத்தை முடித்து வைத்துவிடவேண்டும். இது தான் எனக்குப் பெரிய கவலையா யிருக்கிறது. ஒரே பெண்குழந்தையைக் கொண்டு இவ்வளவு பெரிய உத்தியோகத்தில் இருக்கும் நான், இவ்வளவு சங்கடப்பட்டால், சொற்பச் சம்பளத்தில், நாலைந்து பெண்குழந்தைகள் இருக்கிறவர்கள் என்னபாடுபடுவார்கள்! (லட்சுமி அம்மாள் வருகிறாள்)

லட் :— என்ன யோஜிச்சுக் கிண்டிருக்கேள்? கிராமங்களுக்குப் போகணுமின்னு சொன்னேளே. எப்போப் போறேள்?

தாசில் :— நாளைக் காலை புறப்படப் போகிறேன். போனால் திரும்புவதற்குக் குறைந்தது மூன்றுமாதம் செல்லும். ஒருகிராமமா, இரண்டு கிராமமா! தாலுகா பூராவும் மழை தண்ணீரில்லாமல் சாவியாய் விட்டதாம். ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் எல்லாரும் வஜா கொடுக்கவேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். வஜா கொடுப்பதென்றால் லேசான சமாசாரமா! பூராவும் பார்த்தால்தான் ஆகும். என்ன செய்கிறது? கஷ்டம்தான். ஒருபுறம் ஏழைக்குடிகள் மறுபுறம் சர்க்கார் —

லட் :— கஷ்டம் என்ன! நீங்க பொய்யா எழுதப்போறேள். உள்ளது தானே எழுதுவேள். ஒங்கமேல் துரைகூட பக்ஷமாக இருக்கிறதாகச் சொன்னேளே! இரண்டொரு கிராமம் பார்த்துப் பொது

வா எழுதினுப் போறது. இதுக்குத் தாலுக்கா பூராவும் சுத்து வானேன்.

தாசில் :— பெண்களுக்கு என்ன தெரியும்? சர்க்கார் சங்கதியைப் பற்றி யெல்லாம் லேசாகச் சொல்லி விடுகிறார்கள். ஒவ்வொரு இடத்தையும் சுற்றிப் பார்த்து இவ்வளவு வஜாக் கொடுக்கலாம் என்று எழுதினுலே இந்த நாளில் கலெக்டர்கள் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். அப்படி யிருக்க, என்னவோ பார்க்கிறதாம், எழுதுகிறதாம்!

லட் :— அப்போ நீங்க போறு மூணுமாஸம் செல்லும் எங்கிறீர்களே. நாங்களும் வர்ரோம். இருக்கட்டும். குழந்தை பெரியவளாகி ஒருவருஷமாச்சு. இந்த மாதிரி எவ்வளவு நாள் வச்சுக்கிண்டிருக்கிறது? சம்பந்திகள் தான் பேசாமலிருக்கா. நீங்களாவது ஒரு காகிதம் எழுதி ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டாமா?

தாசில் :— உனக்கு எத்தனை தடவை சொல்லுகிறது? முந்தி நான் எழுதினதற்கு மாப்பிள்ளைக்கு இஞ்ஜினீர்படிப்பு முடிந்த பிற்பாடுதான் சாந்திமுகூர்த்தம் என்று எழுதிவிட்டார்களே. மறுபடியும் மறுபடியும் எழுதுவதில் என்ன பிரயோஜனம்?

லட் :— சரி அவாளுக்கு எப்போ நல்லமனசு வர்ரதோ அப்போ நடக்கட்டும். எப்படியும் நீங்க திரும்பறத்துக்கு மூணுமாசமாகுமே? என்னத்துக்கு ரெட்டைச்செலவு? நாங்களும் கூட வர்ரோம்.

தாசில் :— எதற்காக? அடிக்கடி இங்குவந்து போவேன். நீங்கள் இங்கே இருக்கலாம். நாளைக் காலையில் கட்டாபம் போகவேண்டும். நீ போதுமான சாமான்களைத் தயாராய் எடுத்துவை. நேரமாகிறது. கச்சேரிக்குப் போகவேண்டும். சமயல் ஆய்விட்டதா?

லட் :—பத்துமணிக்கே சமயல் ஆச்சு. உங்களைக் கூப்பிடத்தான் வந்தேன். மறந்துபோய் விட்டேன்.

தாசில் :—சரி. நாழிகை ஆகிறது. இலேபோடு. வந்து விடுகிறேன். (போகிறார்கள்)

அங்கம் இரண்டு.

காட்சி ஒன்று

இடம் :—ஆஸ்பத்தரி காலம் :— மாலை.

[சாவிநிலம் பார்க்க போன இடத்தில் வண்டி சாய்ந்து தாசில் நரசிம்மையர் அடிபட்டு மூர்ச்சையாய் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். வைத்தியர் மருந்து கட்டிக் கொண்டிருக்கிறார். லட்சுமி அம்மாளும் மங்களமும் வீட்டிலிருந்து தலை விரிகோலமாய் ஆஸ்பத்திரிக்கு வந்து தாசில் நரசிம்மையரைப் பார்த்ததும், லட்சுமி அம்மாள் மங்களத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்.)

லட் :— மங்களம்! இனி நான் என்ன செய்வேண்டி ? போகும் போதே சகுனம் நன்றாயில்லை. காக்கா இடத்துலே போச்சு. நான் போறவரை திரும்பக் கூப்பிடலா மின்னு பார்த்தேன். அதுவே சகுனத் தடையாயிருக்கு மின்னு சும்மா இருந்தேன். பாவி-நான்-க்ஷேமமாக வீட்டுக்கு வந்து சேரணு மின்னு எண்ணிக்கிண்டேன். சேவகன் ஓடி வரும் போதே என் தலையில் இடிவிழுந்தாப் போலிருந்ததே. என்ன இன்னு கேட்டதுக்குக் கூட அந்தப் பாவி ஒன்னுமில்லை அம்மா. ஐயா ஆஸ்பத்திரியில் வந்திருக்காங்க இன்னு தானே சொன்னான். அப்போதே என்னவோ மோசம் நடந்திருக்கின்னு எண்ணினேன். என்ன செய்வேன் ! பாவி உயிர் இன்னும் போகமாட்டேன் இன்கிறதே. ஐயோ ! எவ்வளவு ரெத்தம் எப்படித்தான் பொறுத்துக் கொண்டிருந்தாரோ தெரியல்லே. மங்களம் ! உங்கப்பாவுக்கு உயிர் இருக்கோ என்று கேளேன். என்னுடன் ஒரு வார்த்தையாவது பேசமாட்டாரா ? (புருஷன்அருகில் போகிறாள்)

வைத்தியர்: — அம்மா! இன்னும் கொஞ்சநேரம் இங்கு வராதேயுங்கள். கட்டு பூராவும் கட்டின பிறகு நீங்கள் தாராளமாக வந்து பார்க்கலாம். கொஞ்சம் பொறுங்கள்.

லட் :— அப்பாவுக்கு எப்படி இருக்கின்னு கேளேன் மங்களம்?

வைத்:— பயம் இல்லை.

லட் :— ஐயோ ! ஒளிக்காமல் சொல்லுங்களேன்.

வைத்:— அம்மா! பயம் ஒன்று மில்லை. நீங்கள் ஏன் வீணில் வருத்தப்படுகிறீர்கள்? அவர்கள் காயத்தை நான் எப்படியாவது கஷ்டப் பட்டு ஒருவித அபாயமு மில்லாமல்செய்து விடுகிறேன். நீங்கள் பயப்படவேண்டாம். கொஞ்ச நேரத்தில் மூர்ச்சை தெளிந்து விடும். நீங்கள் சற்று சத்தம் போடாமல் இருங்கள்.

மங்:—ஏன் ஐயா! எங்கள் தகப்பனுர்க்குப் பயம் இல்லையே? நீங்கள் சொன்னல் போதும்.

வைத்:—குழந்தாய்! யாதொரு பயமில்லை. சீக்கிரத்தில் அவர் பசிக்கிறதென்று சொல்லுவார் பார். அதோ பால் இருக்கிறது. அதில் கொஞ்சம் கொடு. அவரைச் சிரமபடுத்தாதேயுங்கள். இன்னும் நாலு ஐந்து நாளில் சௌக்கியமாய்விடும்.

மங்:—நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. நீங்கள் சொல்லுகிற படி செய்கிறோம். [வைத்தியர் போகிறார்]

(தாசில் நரசிம்மையர் மூர்ச்சைதெளிந்து மங்களத்தைப் பார்த்துபேச முடியாமல்ஜாடை காட்டுகிறார். மங்களம் வைத்தியர் சொன்னபடி கொஞ்சம் பால் கொடுக்கிறாள். பால் சாப்பிட்டு மெள்ளப்பேச ஆரம்பிக்கிறார்).

நர:—மங்களம். நீங்கள் பயப்பட வேண்டாம். உங்கம்மாவை இப்படி வரச்சொல். [லட்சுமிஅம்மாள் பக்கத்தில் வருகிறாள். பேச ஆரம்பிக்கிறார். பேசமுடியவில்லை. மூர்ச்சையாகிறார்]

லட்:—ஐயோ என்னசெய்வேன்! என்னை இப்படிமோசம்செய்வேனுன்னு கனவிலும் கருதல்லையே! தெய்வத்துக்கும் கூட கண்ணில்லையோ! என்னன்னமோவா எண்ணிக்கிண்டு இருந்தேனே. ஐயோ பிராணன் போய்விட்டது போலிருக்கிறதே? மூச்சையே காணவில்லையே! [வைத்தியர் சத்தம்கேட்டு மறுபடியும் வருகிறார்]

வைத்:—[நரசிம்மையரைத் தொட்டுப்பாத்து] அம்மாநீங்கள் ஏன் வீணில் அழுகிறீர்கள். அவர் களைப்பினுல் தூங்குகிறார். அவரைப் பற்றி நீங்கள் பயப்படவேண்டியதில்லை. நான் சொன்னபடி நீங்கள் மட்டும் நாலு ஐந்துநாளைக்கு அவரைத் தொந்தரவு செய்யாமல், வேண்டும்போது பால் மாத்திரம் கொடுத்துக் கொண்டிருங்கள். பேச்சுக்கொடுக்காதேயுங்கள். களைப்பு வரும். நான் சொன்னதி ஞாப

கத்தில் இருக்கட்டும். நானும் அடிக்கடி வந்துபார்த்துக்கொள்கிறேன்.

மங்:—நீங்கள் சொல்லுகிறபடியே செய்கிறோம்.

வைத்—[கொஞ்சதூரம் போய் திரும்பிவந்து யோஜனையுடன்] சுமந்தாய்! நான் ஒரு சங்கதி சொல்ல வேண்டுமென்று எண்ணினேன். மறந்து போய்விட்டது. அதைப்பற்றி நீங்கள் வருத்தப்படாமலிருந்தால் சொல்லுகிறேன்!

மங்:—என்ன!
லட்:—என்ன!

வைத்:—ஒன்றுமில்லை. உயிருக்குச்சேதமில்லை. ஆனால் மணிக்கட்டுகளில் பலமான அடிபட்டிருக்கிறது. ஒரு வேளை அதை எடுத்துவிடவேண்டிவரும் போல் இருக்கிறது. அதற்காக யோசிக்கிறேன்.

லட் :— அப்படியா! எதுக்காக எடுக்கணும்?

வைத் :— பலமான அடிபட்டதினால் ரணம் கண்டுவிட்டது. அப்படி எடுக்காமல் போனால் ஒருவேளை உயிர்க்கே சேதம்வருமோவென்று ஓர் சந்தேகம்.

லட் :—ஐயோ! விதியே! இதுவும் என்தலையிலெழுத்து. மணிக்கட்டுகளை எடுத்துவிட்டால் உயிர்ச்சேதம் வராதே?

வைத்:— உயிர்ச்சேதம் வாராதிருக்கத்தானே இது செய்ய வேண்டும் என்கிறது.

லட் :— (தனக்குள்) எப்படியாவது அவர் பிழைச்சாப்போதும் தாலியைக்கட்டிக்கிண்டு நாலுபேர் மத்தியிலிருக்கலாம். (வெளிப்படையாய்) ஆமா, புருஷாளிடத்தில் கேட்க வேண்டாமா?

வைத்:— இன்றைக்கு அதைபற்றிக் கவலையில்லை. அவர்கள் களைப்புத் தீர்ந்தவுடன் கேட்டுக்கொண்டு வேண்டியதைச் செய்யலாம் என்று எண்ணியிருக்கிறேன்

லட் :—ஆமா, பாத்துக்கிண்டு செய்யுங்கோ. ஆனா உங்களுக்குத்தெரியாததா?

வைத் :—இது அவசியமா இருந்தால்தானே. இருக்கட்டும். அவர்கள் தூங்குகிறார்கள். நான்போய் வருகிறேன். சாவதானமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். பேச்சுமட்டும் கொடுக்காதேயுங்கள்.

[போகிறார்.]

அங்கம் இரண்டு.

காட்சி இரண்டு.

இடம் :— வீட்டுச் சிறுதிண்ணை காலம் :— காலை

நரசிம்மையர் :—(மணிக்கட்டுகள் இல்லாமல் திண்ணையில் உட்கார்ந்து வருத்தப் பட்டுக்கொண்டு) நான் இனிமேல் என்னசெய்வேன்! அன்றே மணிக்கட்டுகள் எடுபடாமல் என் பிராணன் போயிருந்தால், இவ்வளவு சங்கடங்களும் அனுபவிக்காமலிருந்திருக்கலாம். டாக்டரோ இனிவேலைக்கு லாயக்கில்லை யென்று எழுதிவிட்டான். பத்து வருஷம் சர்விஸ் இல்லாததினால் பென்ஷன் கூடக் கிடையாதென்று சொல்லிவிட்டார்கள். பாழும் ஆர்பத்நாட் கம்பேனியில் போட்ட பணத்தின் வட்டியையாவது எடுத்துக் காலட்சேபம் செய்யலாமென்று எண்ணியிருந்ததற்கு தெய்வம் அதிலும் மண்போட்டுவிட்டது. இனி என்ன செய்யலாம்? வேறே எங்கேயாவது வேலைபார்ப்போம் என்றால் கை இல்லையே. மனிதர்களுக்கு எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அங்கஹீனம் இல்லாமலிருந்தால் எப்படியாவது பிழைக்கலாம். நம் கதியோ அதோகதியாய் விட்டது. நமக்கு இவ்வளவு கஷ்டம் போதாதா? இன்னும் ஜகதீசன் ஏன் சோதிக்கவேண்டும்? நான் அன்று வாழ்ந்த வாழ்வு என்ன? இப்பொழுதுள்ள ஈனஸ்திதி என்ன? என் வீட்டில் பத்துப்பேர்கள் கைகட்டி வேலை பார்த்ததுபோய் என் சம்சாரம் அசல் வீட்டில் வேலை செய்து காலக்ஷேபம் செய்யும் கதி எனக்கு வந்துவிட்டது. ஈசன் இவ்வளவாவது நம்பேரில் கிருபை வைத்தாரே. கொண்டவள் துன்முகியாயிருந்தால் என்பாடு இதிலும் திண்டாட்டம். (மௌனம்)லட்சுமிஎன்றபெயர் அவளுக்கே தகும். அவள் நல்ல பெண்ணாயிருப்பதினால் அல்லவோ இவ்வளவுதூரம் பொறுமையுடன் எனக்கு சுச்ருஷை செய்துகொண்டு வருகிறாள். (பெருமூச்சு விடுகிறார். ஆர்பத்நாட் கம்பேனி இவ்வளவு திடீரென்று மோசம்போகுமென்று ஒருவரும் சொப்பனத்தில் கூட எண்ணவில்லை. இவைகளை யெல்லாம் பெரிய கஷ்டமாக எண்ணிக்கொண்டு இருக்கிறேனே. இவற்றிலும்

பெரிய கஷ்டம் ஒன்று இருக்கிறதே! என்ன செய்வேன்! குழந்தை மங்களத்தின் சாந்திமுகூர்த்தம் இந்த வருஷம் செய்ய வேண்டுமென்று சொல்லுவார்களே. அதற்கு ரூபாய் ஆயிரம் வேண்டுமே எங்கிருந்து கொடுக்கப் போகிறேன். ஈசா! (மூர்ச்சையாகிறார்)

மங்களம்:—(வெளியில் வந்து தகப்பனார் மூர்ச்சையாயிருக்கிறதைப் பார்த்து)

அண்ணா (பேச்சில்லை) தகப்பனாரைத் தட்டியெழுப்புகிறாள் (எழுந்திருக்கிறார்) அண்ணா உங்களுக்கு என்ன செய்கிறது.

நர :—எனக்கு ஒன்றுமில்லை.

மங் :—ஏன் மூர்ச்சைபோலிருந்ததே?

நர :—இல்லை. என்னவோ நினைத்துக் கொண்டேன். வருத்தமா யிருந்தது.

மங் :—நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? ஒன்றுக்கும் வருத்தப்படவேண்டாம். எல்லாவற்றிற்கும் சுவாமி இருக்கிறார் அண்ணா.

நர :—கண்ணே! நீ கெட்டிக்காரி. உனக்கு ஒருநாளும் குறைச்சல் வராது.

மங்:—அண்ணா! அதிருக்கட்டும். நீங்கள் என்னவோ நினைத்துக்கொண்டேன் என்று சொன்னீர்களே (கெஞ்சி) அதை சொல்லப்படாதா?

நர :—ஒன்றுமில்லை. உன் சாந்தி முகூர்த்த விஷயமாகத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்—

மங் :—அதற்கு இப்போது என்ன அண்ணா?

நர :—இன்னும் மூன்று மாதம் தானே இருக்கிறது அவனுக்குப் படிப்பு முடிகிறதற்கு.

மங் :—அதனால் என்ன?

நா :—ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமே—

மங் :—என்ன அண்ணா! நீங்கள் கூட இப்படி வருத்தப் படுகிறீர்கள். அவர்களுக்கென்ன தெரியாதா? இப்போது நீங்களிருக்கும் ஸ்திதியைப் பார்த்து அவர்கள் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள்.

நா :—மங்களம். நீ சிறு குழந்தையானதால் அப்படிச் சொல்லுகிறாய். உன் மாமனுரா விட்டு விடுவார்? அவருக்கு ஈவு இரக்கமே கிடையாதே.

மங் :—(மனவருத்தத்துடன்) நீங்கள் அவரை அப்படி யெல்லாம் சொல்லக்கூடாது. நிரம்ப நல்லவரன்றோ?

நா :—இந்தக் காலத்தில் எவ்வளவு நல்லவர்களா யிருந்தாலும் பணத்தினால் கெட்டவர்களாய் விடுவார்கள்.

மங் :—அப்படி எல்லாரையும் சொல்லலாமா? அதிலும் என் புக்ககத்துப் பேரை நீங்கள் அப்படி ஒரு நாளும் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் எனக்கு வருத்தமாயிருக்கும்.

நா :—நான் இனிமேல் சொல்லவில்லை. நீ வருத்தப்பட்டுக் கொள்ளவேண்டாம். இருக்கட்டும். எனக்கு பசி அதிகமா யிருக்கிறது. ஏதாவது இருக்கிறதா?

மங் :—காபி வைத்திருக்கிறேன் உள்ளே வாருங்கள்.

(வருத்தத்துடன் போகிறாள்.)

நா :—நான் சொன்னதில் குழந்தை வருத்தப்பட்டுக் கொண்டாள். சிறு குழந்தை. உலக அனுபவம் தெரியாது. தன் மாதிரி எல்லாரையும் நினைத்துக்கொண்டாள். உலகத்தில் நடக்கும் வஞ்சனை சூது தெரியாதவள். என்ன செய்யலாம்? சிறு குழந்தை தானே. (சற்றுப்பொறுத்து) ரூபாய் கொடுக்காததினால் சாந்தி முகூர்த்தம் செய்யமாட்டேனென்று சொல்லிவிட்டால் என்ன செய்கிறது? நான் படுகிற கஷ்டம் போதாதா? குழந்தையின் கஷ்டத்தையும் எவ்வாறு சகிப்பேன். குழந்தையாவது க்ஷேமத்துடன் இருக்க

வேண்டும். சுப்பையரோ மகா முரடர். தீபாவளிக்குத் தங்க அரைஞா ண் போடவில்லை என்று எவ்வளவு கோபத்துடன் குதித்தார். இர ண்டு நாளில் எப்படியோ தயார் செய்து போட்டதின்பேரில்தானே சமாதானமாய்ப் போனார். அப்படிக்கிருக்க ரூபாய் ஆயிரம் கொடுக் காவிடில் சாந்தி முகூர்த்தத்துக்குச் சம்மதிக்கப் போகிறாரா? மாப்பி ள்ளை கோபாலன் நல்ல பையன்தான். ஆனால் அவன் என்ன செய் வான்? தகப்பனார் ஆட்டி வைக்கிறபடி ஆடுகிறான். நமக்கோ ரூபா ய்க்கு வழியில்லை. எல்லாம் ஜகதீசன் பொறுப்பே. திக்கற்றவர்களு க்குத் தெய்வமே துணை. (போகிறார்.)

அங்கம் இரண்டு.

காட்சி மூன்று.

இடம் :— நரசிம்மையர் வீட்டுக் கூடம் காலம் :—மாலை

லட்சுமி :—(வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாள்) நம்முடைய கதி இப்படியாகுமின்னு கனவிலும் நினைக்கல்லை. நாழிகையோ ஆச்சு. அசல் தெருவுக்கு சீக்கிரம் போய் வேலை செய்து இருட்டு முன் திரும்பனும். இந்த வருஷத்தில் மங்களத்துக்குச் சாந்திக்கலியாணம் செய்யவேணுமின்னு கடிதம் எழுதினத்துக்குப் பதில் வரல்லை இன் னு சொன்னா. ஒரு வேளை அவா முகூர்த்தம் வச்சு ரூபாய் கேட்டால் என்ன செய்றது? (யோசித்து) செய்வதென்ன இருக்கு?

மங்களம் :—(ஒரு கடிதத்துடன் வந்து) அம்மா! கடிதம் வந்தி ருக்கிறது. அண்ணா எங்கே?

லட் :—திண்ணையில் படுத்துக்கொண்டிருக்காரே. நீ பார்க் கல்லையா! எங்கிருந்து காயிதம் வந்திருக்கு!

மங் :—நான் பார்க்கல்லையே. எங்கிருந்து வந்திருக்கிறதோ.

லட் :—உங்கப்பாவைக் கூப்பிட்டு வாசிக்கச் சொல்லிக் கேளே ண்டி. (மங்களம் வெளியேபோய் தகப்பனாரைக் கூட்டிக் கொண்டுவரு கிறாள்).

நர :—(கடிதத்தை உடைக்கச் சொல்லி வாசிக்க ஆரம்பிக்கிறார்).

உ

க்ஷேமம் காஞ்சிபுரம் 17—3—1908.

(காஞ்சி யென்று கேட்டதும் மங்களம் வெட்கத்துடன் மறைவில் நின்று கவனிக்கிறாள்.)

மகா-ள-ள-ஸ்ரீ சம்பந்தி நரசிம்மையர் அவர்களுக்கு அநேக நமஸ்காரம். உபயக்ஷேமம். உங்கள் கடிதம் கிடைத்தது. பார்த்துக் கொண்டேன். நாளது மீ 15-உயில் நல்ல முகூர்த்தம் இருக்கிறதென்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். அந்த முகூர்த்தத்தில் குழந்தைகளுக்கு ருது சாந்தி கலியாணம் செய்யவேண்டுமென்று தீர்மானம். ஆதலால் தாங்கள் எல்லாரையும் கூட்டிக் கொண்டு வந்து சேரவேண்டியது. நான் வந்து குழந்தை மங்களத்தை அழைத்து வர சௌகரியமில்லை. குழந்தையை இவ்விடம் கூட்டிக்கொண்டு வருகிறதற்கு 12ம் தேதி நல்ல நாளாயிருக்கிறதாம். அதனால் தாங்களே கூட்டிக் கொண்டு வந்து சேர வேண்டியது. தாங்கள் முன் சொல்லியபடி ரூபாய் ஆயிரம் உடனே அனுப்பவேண்டியது.

வேணும் நமஸ்காரம்

சுப்பையர்.

எல்லாம் நல்லது. இப்போது ரூபாய் ஆயிரத்துக்கு நாம் என்ன செய்கிறது? அதுதான் யோசனை.

லட்:—யோசனை என்ன? எங்கேயாவது கடன் வாங்கிக் கொடுத்து முகூர்த்தத்தைக் கட்டாயம் நடத்த வேண்டியதுதான். நம் தலையில் தான் இப்படி எல்லாம் எழுதியிருக்கு! குழந்தையாவது க்ஷேமமா இருக்கட்டும்.

நர:—நீ சொல்லுகிறது வாஸ்தவம். இப்பொழுது என்னை நம்பி யார் ஆயிரம் ரூபாய் கொடுக்கப் போகிறார்கள்? நானோ அங்கஹீனன். என்ன செய்கிறது? கஷ்டம் எல்லாம் ஒன்றாக வந்திருக்கிறது. நான் என்ன செய்வேன்? வந்ததை எல்லாம் அனுபவிக்க வேண்டியது தான். குழந்தையையும் வீட்டில் வைத்துக்கொண்டு அனுபவிக்க வேண்டிய விதியிருந்தால் அந்தக் கஷ்டத்தையும் அனுபவித்துத் தீருகிறேன்.

லட் :—நீங்க இப்படி முரண்டு சேஞ்சால் என்ன செய்ரது? நம்முடைய கஷ்டம் பல விதமாகத்தான் இருக்கும். எப்படியாவது சாந்தி முகூர்த்தத்திற்கு வழிதான் செய்யணும்.

நா :—செய்யவேண்டியது அவசியம்தான். அதற்கு வழி? முன் ஒரு நாள் நான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது மங்களம் வந்து "அவர்கள் ரூபாய் கேட்க மாட்டார்கள். நீங்கள் வன் வீணில் வருத்தப்படவேண்டும்" என்று சொன்னாள். அதற்கு நான் "நீ சிறு குழந்தை. உன் புக்ககத்துப் பேர் சமாசாரம் தெரியாமற் சொல்லுகிறாய்" என்றதற்கு வருத்தப்பட்டுக் கொண்டாள். இப்போது என்ன செய்வாளோ தெரியவில்லை.

லட் :—அதெல்லாம் நமக் கென்னத்துக்கு? பணம் எப்படியாவது கடன் வாங்கிக் கொடுக்க வேண்டியதுதான்.

நா :—நான் எங்கே போய் ரூபாய் கடன் கேட்பேன்? என்னை நம்பி யார் கடன் தருவார்கள்? அவள் தலை யெழுத்துப்போல் நடக்கிறது. [கேட்டுக் கொண்டு மங்களம் வருகிறாள்] என்ன செய்யலாம்.

மங் :—அப்பா "தலை யெழுத்துப் போல் நடக்கிறது" என்று சொன்னீர்களே, அதென்ன?

நா :—உனக்கொன்று மில்லை. முகூர்த்தம் வைத்து இருக்கிறார்களாம். ஆயிரம் ரூபாய் அனுப்பவேண்டு மென்று உன் மாமனார் எழுதியிருக்கிறார். அது தான் வருத்தப்பட்டுக் கொண்டு தலை யெழுத்துப்போல் நடக்கிறதென்று சொன்னேன்.

மங் :—என் மாமனாரா ரூபாய் அனுப்பவேண்டும் என்று எழுதியிருக்கிறார்?

நா :—இதோ பார் கடிதம். (லட்சுமி அம்மாள் கீழேயிருந்து கடிதத்தை எடுத்துக் கொடுக்கிறாள்.)

மங் :— (ஆச்சரியமும் விசனமும் அடைந்து மனந்தேறி) அதற்கென்ன? நீங்கள் அதைப்பற்றி வருத்தப்பட வேண்டாம். எல்லாம்

நல்ல வேளை வந்தால் நடக்கும். அம்மா! உன்னை அடுத்தாத்து மீனு கூப்பிடுறாள். (லட்சுமி அம்மாள் போகிறாள்.)

அண்ணு! நீங்கள் ஒன்றுக்கும் வருந்த வேண்டுவதில்லை. அம்மா மாதிரி நானும் வேலைசெய்து காலம் தள்ளுகிறேன். நல்ல காலம் பிறக்காமலா போய்விடும்!

நா:—கண்மணீ. உன் தாயார் வேலை செய்கிறதை பார்ப்பதற்கே என் பிராணன் போகிறது. அது போதாதா? நீயும் வேலை செய்ய நான் எப்படி சகிப்பேன்!

மங்:—அண்ணு. என்ன செய்கிறது? காலம் வந்தால் எல்லாஞ் சரியாய்ப் போய்விடும். அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. நானும் அம்மா இடத்தில் கேட்டுக்கொள்கிறேன். நாளை முதல் எங்கேயாவது வேலை செய்யப் போகிறேன். எனக்கு வேலை அதிகமிருக்கிறது நான் போகிறேன். (வருத்தத்துடன் போகிறாள்.)

நா:—[வருத்தத்துடன்] என்ன செய்யலாம் வருவதெல்லாம் வந்துதான் தீரும். இக்கஷ்டம் என் ஆயுசுவரை உண்டு. அதை அனுபவித்துத்தான் தீரவேண்டும். [போகிறார்.]

அங்கம் இரண்டு.

காட்சி நான்கு.

இடம்:—காஞ்சிபுரத்தில் சுப்பையர் வீடு காலம்:—மாலை

(கோபாலன் தன் அறையில் புஸ்தகம் பார்த்துக் கொண்டிருக்கையில் தந்திச்சேவகன் தந்தி கொண்டு வந்து கொடுக்க அதைப்பார்த்து சந்தோஷத்துடன் கூடத்திற்கு வருகிறான்.)

கோபாலன்:—அண்ணு! தந்தி வந்திருக்கிறது. நாளை திருவண்ணமலைக்கு போகவேண்டும். அவ்விடத்தில் அஸிஸ்டண்டு இன்ஜினீராக என்னை நியமனம் செய்திருக்கிறார்கள். நான் இன்று சாயங்கால ரயிலில் போனால் நல்லது.

சுப்பையர்:—அதற்கென்ன? அப்படியே செய். நானும் கூட வருகிறேன்.

கோபா :—அண்ணு நான் என்ன சிறு குழந்தையா? இப்போது மணி நாலு ஆகிறது. ஐந்து மணி வண்டிக்குப் போகவேண்டும். வேலையை ஒப்புக்கொண்டு இரண்டு வாரத்திற்குள் ஒருநாளைக்கு ரஜா எடுத்து இங்கு வந்து எல்லாரையும் அழைத்துக் கொண்டு போகிறேன். அதற்குள் சௌகரியமாய் ஜாகாவும் பார்த்துவைக்கிறேன். எல்லாருமே பிறகு அவ்விடத்திற்கு போகலாம்.

சுப்பையர்:—நேரமாகிறது. நான் வண்டி பார்த்துக்கொண்டு வருகிறேன். நீ உன் தாயாரிடத்தில் சொல்லிக்கொண்டு சாமான்களை எடுத்துவை. [போகிருர்.]

கோபாலன் :—என்ன செய்யலாம்? உத்தியோகம்கிடைத்ததென்று ஒரு விதமாக சந்தோஷம் கொண்டாலும், மனது மறுவிதமாகக் கவலைஅடைகிறது. தகப்பஞரோ ஒரே முரண்டாக இருக்கிருர். நான் அவரிடம் எவ்வளவு சொல்லியும் கேட்கமாட்டே னென்கிருர். என் மாமஞர் முன்போல்இருந்தால் இந்த ரூபாயை லட்சியம் செய்வாரா? ஒரு நாளும் மாட்டார். அவருடைய கஷ்டகாலத்தில் இவர்களும் இப்படிசொல்லுகிறது எனக்கே நன்ருகவில்லை. நான்--என்ன செய்யமுடியும்? பெற்ருேர் வார்த்தையைக் கேட்கவேண்டியவஞயிருக்கிறேன். ஆனல் ஒரு விதத்தில் சந்தோஷம்தான். என்னை வேறே கலியாணம் செய்துகொள்ளச் சொன்னதற்கு நான் கட்டாயம் மாட்டேனென்று மறுத்துவிட்டேன். அதன் பின் என்னை அவர்கள் நிர்ப்பந்தப்படுத்தாமலிருக்கிருர்களே. அந்த மட்டும் நலம்தான். நான் திருவண்ணுமலைபோய் வேலை ஒப்புக்கொண்டவுடன் ஏன் என் மாமஞரைப்பார்த்துச் சமாதானம் சொல்லக்கூடாது? சொல்லலாம். ஒருவேளை அண்ணுவுக்குத் தெரிந்து கோபித்துக்கொண்டால் என்ன செய்கிறது? எல்லாவற்றிற்கும் பின்னல் பார்த்துக் கொள்வோம். நாழிகை ஆய்விட்டது. வண்டியும் சீக்கிரம் வந்துவிடும். சாமான்களை எடுத்துத் தயார்செய்வோம். (போக எத்தனிக்கிருன் சுப்பையர் வருகிருர்.)

சுப்பையர்:—கோபாலா ! வண்டிவந்து விட்டது. நேரம் அதிகமில்லை. சாமான்களை எடுத்துக்கொண்டு சீக்கிரம் புறப்படு. அம்மாவிடம் சொல்லிக்கொண்டாயா ?

கோபாலன்:—சாமான்களை எடுத்துவைத்துக்கொண்டிருந்தேன். இதோ சொல்லிக்கொண்டு வந்துவிடுகிறேன். வண்டிக்காரனை சாமான்கள் எடுத்துவைக்கச் சொல்லுங்கள். (போகிறான்)

அங்கம் இரண்டு.

காட்சி ஐந்து

இடம்:—திருக்கோவிலூருக்கு அடுத்த அத்திக்காடு
காலம்:—பகல்.

(மங்களம் மாளய அமாவாசைக்கு ஸ்நானம் செய்து கூட வந்தவர்களைப் பிரிந்து வழிதவறித் தவிக்கிறாள்.)

மங்களம்:—ஆ! என்ன செய்வேன்! இவ்வடர்ந்த காட்டுக்குவழி தப்பிவந்து விட்டேனே! யாரைப்போய் இவ்விடத்தில் கேட்பேன்! இங்கு யாரையையும் காணவில்லையே! எங்கு பார்த்தாலும் துஷ்ட மிருகங்களின் சப்தத்தைத் தவிர வேறே யொன்றையும் காணவில்லையே! (கொஞ்சதூரம் போகிறாள். காலில் ஒருமுள்தைக்கிறது) ஐயோஎன்னவோ கடித்து விட்டதே! (உட்கார்ந்துகொண்டு காலைப்பார்க்கிறாள்.) முள் நன்றாகத் தைத்திருக்கிறதே. (எடுக்க முயல்கிறாள்) இப்பாழும் முள்பிடுங்க வரவில்லையே! இதுவரை நான் பட்டகஷ்டம் போதாதா? ஈசனே! இக்காட்டில் தனிமையாய் அகப்பட்டு நடக்கமுடியாமல் பட்டினியிருந்து சாகவோ என்தலையில் எழுதியிருக்கிறாய்? அல்லது காட்டு மிருகங்களுக்கு இரையாகவோ? அம்மா! இச்சங்கடங்களை அனுபவிப்பதைப்பார்க்கிலும் உயிர்விடுவதே நல்லது. ஆனால் வயது சென்ற, அதிலும் கைவழங்காமலிருக்கிற, என்தகப்பனுருக்கு யார் தேறுதல்சொல்லுவார்? சொல்லப்போகிறார்கள்? நான் ஒரு குழந்தை இருக்கிறேனென்று தானே அவர் இவ்வளவு காலமும் கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு உயிருடனிருக்கிறார். நான் அயல் வீட்டில் போய் வேலைசெய்ய என்தாயார் கொஞ்சமேனும் முதலில் சம்மதிக்கவில்லையே! நான் எடுத்துச்சொன்ன நியாயங்களிருந்து இருவரும் ஒருவாறு சம்மதித்தார்கள். அதன் மூலமாகவாவது எனக்கு நல்ல காலம் பிறக்குமென்று நினைத்தேன். வந்தஇடத்திலும் நம்மைச்

176128

சனியன் விட்டபாடில்லையே? ஒரு பெரியவர் வீட்டில் வேலைக்கு அமர்ந்தேன், என் மனதார நான் ஒருவருக்கும் யாதொரு தீங்கும் செய்யவில்லையே! நான் இப்படி இக்காட்டில் தவிப்பதை அவர் அறிவாரோ? ஒருநாளும் அறியாரே! (சத்தம் கேட்டு) யாரோவருகிறது போல் தெரிகிறதே? ஐயோ! எனக்குப் பயமாயிருக்கிறதே!
(சற்று ஒதுங்குகிறாள். கோபாலன் நாலை ஐந்து லஸ்கர்களுடன் வருகிறான்.)

கோ:—(ஓர் பெண் இருப்பதை பார்த்துத் திடுக்கிட்டுத் தனக்குள்) யாரோ பெண்பால் போல் இருக்கிறதே! இந்தக் காட்டில் தனிமையா யிருக்கிறாளே இந்நேரத்தில்! (சற்று சமீபம்சென்று) நீங்கள் யாரம்மா?

மங்:—(வெட்கத்துடனும் மனவருத்தத்துடனும் ஈனசுரத்துடன் திருக்கோயிலூருக்குப் போகிற பாதை தெரியவில்லை. திண்டாடுகிறேன்.

கோ:—பயப்பட வேண்டாமம்மா! நீங்கள் இக்காட்டில்தனிமை) யாய் வந்தது எப்படி.

மங்:—நாங்கள் சிலர் தீர்த்தமாட வந்தோம். நான் பிரிந்து வழி தவறி விட்டேன். (உட்கார்ந்துகொண்டு காலை பிடித்துக்கொண்டிருக்கிறாள்)

கோ:—உங்களுக்குக் காலில் என்னவேதனை? ஏதாவது கடித்து விட்டதா என்ன?

மங்:—ஐயோ! என்னால் நடக்கமுடிய வில்லையே! காலில் ஒரு முள் தைத்து விட்டது.

கோ:—யார்டா முள்வாங்கி வைத்திருக்கிறவன்! முள்ளையெடு? (லஸ்கர் முள் எடுக்கிறான்)

மங்:—(சற்று சமீபம்வந்து புருஷனென்று அறிந்து வெட்கித் தலை குனிகிறாள்)

கோ:—திருக்கோயிலூரென்று சொன்னீர்களே! உங்கள் தகப்பனார் பேர் என்ன? உடனே உங்களை கூட்டிக்கொண்டுபோய் சேர்க்கச் சொல்லுகிறேன் பயப்பட வேண்டாம்.

மங்:—(அழுது கொண்டு) இப்படியும் ஈசன் என்னைச் சோதிக்க வேண்டுமோ? என்னால் சகிக்கமுடியவில்லையே! அம்மா.

கோ:—அம்மா உங்களுக்கு என்ன செய்யகிறது? திடீரென்று விம்மி விம்மி அழவேண்டிய காரணமென்ன? சொல்லுங்கள். என்னால் முடியுமானால் உங்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்கிறேன்.

மங்:—என் கஷ்டத்தை ஜகதீசன்தான் நிவர்த்தி செய்யவேண்டும். மனுஷ்யர்களால் ஆகக் கூடியதில்லை.

கோ:—அப்படி என்ன அம்மா உங்கள்கஷ்டம்? தெய்வம் துணை செய்வதற்கு மனுஷ்யர் முயற்சியும் வேண்டும்.

மங்:—என் விஷயத்தில் அப்படியில்லை. என்றாலும், தாங்கள் நிவர்த்தி செய்கிறேனென்று சொல்வதினாலும், என் மேல் இரக்கம் கொண்டிருப்பதாலும் சொல்லுகிறேன். ஆனால்--எனக்கு வெட்கமாயிருக்கிறதே? (வருத்தத்துடன் அழுதுகொண்டு) எனக்குக் கலியாணம் நடந்து ஐந்து ஆறு வருஷம் ஆகிறது. ஆதியில் நல்ல ஸ்திதியில் இருந்தோம். ஏதோ எங்கள் கஷ்டகாலத்தில் பணம் எல்லாம் போய்விட்டது. தரித்திர திசை அனுபவிக்க நேரிட்டது. எனக்குச் சாந்திமுகூர்த்தம் செய்ய வேணுமென்று என் தகப்பனார் கடிதம் எழுதினதற்கு என் புக்ககத்தில் மீதி ரூபாய் ஆயிரமும் கொடுத்தால் தான் செய்வோம் என்று சொல்லி விட்டார்கள். (கோபாலன் திடுக்கிட்டு ஸ்தம்பித்து நிற்கிறான்). என் தகப்பனார் என்ன செய்வார்? சாப்பாட்டுக்கே வழியில்லை. எங்கிருந்து ரூபாய் கொடுப்பார். அதன் பேரில் அவரும் பேசாமலிருந்து விட்டார் ஐயோ! எனக்கு மேல்சொல்ல நா எழவில்லையே! தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு நாழிகை ஆகிறது. ஊருக்குப் போகிற பாதையைக் காட்டச் சொன்னால் தங்களுக்கு மிகப் புண்ணியமுண்டு.

கோ:—அம்மா! நீங்கள் வருத்தப்பட வேண்டாம். உங்களுக்குத் தெய்வம் உதவிசெய்யும். உங்கள் ஊர் பேர் முதலானது சொல்லுங்கள்.

மங்:—ஐயோ! நான் எப்படிச் சொல்வேன்! எனக்கு வெட்கமா யிருக்கிறதே! என்னை வருத்தப் படுத்தாதீர்கள், தயவு செய்து பாதையைக் காட்டச்சொல்லுங்கள். நாழிகை ஆகிறது. கூடவந்தவர் கள் தேடப் போகிறார்கள்.

கோ:—யாரடா அது? இந்த அம்மாளை ஊருக்குப் போகிற பாதையில் கொண்டுபோய் விட்டுவா.

(போகிறார்கள் கோபாலன் அவர்கள் போகிறவழியை பார்த்த வண்ணம் ஆலோசித்தவாறே நிற்கிறான்)

அங்கம் மூன்று.

காட்சி ஒன்று.

இடம்:—திருக்கோயிலூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பங்களா வின் முன் ஹால். காலம்:—இரவு

(போலீஸ் இன்ஸ்பெக்டரும் அஸிஸ்டண்டு இன்ஜினீரும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்)

போ இன்:—என்ன ஸார். ஒருமாதிரியாக இருக்கிறீர்களே? சாப் பாடு உடம்புக்கு ஒத்துக்கொள்ள வில்லையோ? வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ளுங்கள்.

அஸி இன்:—சாப்பாட்டில் ஒரு குற்றமும் இல்லை. என்னவோ ஞாபகத்திற்கு வந்தது. அதை பற்றி யோசித்துக் கொண்டி ருந்தேன்.

போ இன்:—என்ன விசேஷம்!

அஸி இன்:—வேறே ஒன்றும் இல்லை. இன்று நாம் போஜனம் செய்யம்பொழுது ஒரு பெண் பரிமாறினளே? இரண்டு நாளைக்கு முன் பாதை விட்டு வழிதெரியாமல் அணைக்குப் போகிற பாதையில் பார்த்தபெண் மாதிரியிருந்தது. அதுதான் யோசனைபண்ணிக் கொ ண்டிருந்தேன்.

போ இன்:—ஆம் நீங்கள் சொல்வது வாஸ்தவம். எங்கள் பெண்களோடு தீர்த்தம் ஆடப் போயிருந்தாள். வழிதவறி சங்கடப்பட்டுச் சாயரட்சை சமயம் இங்கு வந்துசேர்ந்தாள். நானும் சேவகர்களைக் கொண்டு ஆன மட்டும் தேடச் சொன்னேன்.

அஸி இன்:—அப்படியா? நான் அணைக்கு இன்ஸ்பெக்ஷனுக்காக போனபொழுது தற்சயலாய் இந்தப் பெண்ணை பார்த்து லஸ்கரை அனுப்பிப் பாதையில் கொண்டு சேர்க்கச் சொன்னேன். அந்தப் பெண் தங்களுக்கு எப்படியோ?

போ இன்:—எனக்கு ஒரு சொந்தமும் இல்லை. எங்கள் வீட்டில் உதவிக்காக அமர்ந்து இருக்கப்பட்டவள்.

அஸி இன்:—அவளுக்கு எந்த ஊர்? இவ்விடம் வந்து எவ்வளவு காலம் இருக்கும்?

போ இன்:—அது ஒரு பெரிய பாரதம்! அவள் பிழைப்பு ஓர் பெரியகதை! அதைப் பற்றிநமக்கு ஆகவேண்டியது என்ன? என்னால் கூடிய அளவு எவ்வளவோ சிரமப்பட்டேன். ஒன்றும் நடக்கிற வழியாய்க் காணவில்லை.

அஸி இன்:—எனக்கும் தெரியட்டும் ஸார்! சொல்லுங்கள் அப்படிக்கு என்ன பெரியகதை?.

போ இன்:—எனக்கென்ன ஸார்! சொல்லுகிறேன், கேளுங்கள். ஆனால்கேட்க நிரம்ப வருத்தமாயிருக்கும்.

அஸி இன்:—பாதகமில்லை சொல்லுங்கள்.

போ இன்:—இந்தப் பெண் எங்கள் வீட்டுக்கு வந்து ஒருவருஷம் ஆகிறது. அவளுக்கு மாதம் ஐந்துரூபாய் சம்பளம். ஆனால் அந்த ரூபாயைத் தான் போகும்பொழுது மொத்தமாகக் கொடுத்தால் போதுமென்று சொல்லி எங்கள் வீட்டிற்கு வந்தாள். நாங்கள் வைத்துக் கொண்டோம். அவள் சிற்சில சமயங்களில் வருத்தப்படுவதை என் ஸம்ஸாரம் பார்த்து என்னிடம் சொன்னாள். நான் விசாரித்தேன். அப்புறம்தான் எனக்கு தெரிந்தது. மகா கஷ்டம் ஸார்.

அஸி இன்:—இதெல்லாம் என்னத்திற்கு! விஷயத்தைச் சொல்லுங்கள்.

போ இன்:—அவள் ஒரு தாசில்தார் பெண். (கோபாலன் முகம் செத்துப் போய் விடுகிறது) அவர் உத்தியோகத்தில் இருக்கும்போது தகுந்த இடத்தில் கொடுக்கவேண்டு மென்று ரூபாய் இரண்டாயிரம் கொடுப்பதாகச் சொல்லி ரூபாய் ஆயிரம் கொடுத்துக் கலியாணம் நடந்தது. பிறகு அவர்க்கு உத்தியோகமும் போய் பென்ஷனும் கிடைக்காமல் சேர்த்துவைத்திருந்த பணமும் அர்பத்நட்டில் மூழ்கியதுடன் வேறு வேலைபார்க்கவும் கைவழங்காமல் போய்விட்டதாம். ருதுசாந்திக்கு ரூபாய் ஆயிரம் கொடுக்கமுடியாமலும் போய்விட்டதாம். தாயார் தகப்பனார் இடத்தில் சொல்லிக்கொண்டு எங்கள் வீட்டில் வேலைசெய்து கொண்டிருக்கிறாள். நான் கள்ளக்குறிச்சிக்குப் போன இடத்தில் அவள் தகப்பனாரை விசாரித்து சம்பந்தி இன்னாரென்று தெரிந்துகொண்டு நானும் என்னால்கூடியவரை எத்தனையோ காகிதம் எழுதினேன். ஒன்றும் பயன்படவில்லை. நீங்கள் சொல்லுங்கள் ஸார். இப்பொழுது இருக்கும் ஸ்திதியாவது பார்த்து சாந்திமுகூர்த்தம் செய்யக்கூடாதா என்று எழுதினேன். அவர்கள் பதிலே போடவில்லை.

அஸி இன்:—நீங்கள் உங்கள் வீட்டில் வேலைசெய்து கொண்டிருக்கிறாளென்று எழுதினீர்களோ?

போ இன்:—அப்படி எழுதவேணு! இல்லை. நாலுமாதத்திற்கு முன் காஞ்சிபுரம்போய் இருந்தேன். அவர்களை நேரிற்கண்டு எவ்வளவோ சொன்னேன். கேட்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். என்ன செய்கிறது? அந்தப் பெண்ணுடைய கஷ்டகாலம் தான். நல்லபெண். மரியாதை உள்ளவள். என்ன செய்யலாம்? அந்தக்குழந்தைக்கு இவ்வளவு கஷ்டம் வேண்டாம். எனக்கு இன்னும் ஓர் ஆசைமாத்திரம் இருக்கிறது. அவளுடைய புருஷனைப் பார்த்து மாத்திரம் சொல்ல வேண்டும். நான் போயிருந்த சமயத்தில் அவளுடைய புருஷன் பட்டணத்தில் வாசித்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். எனக்கு வந்த கோபத்திற்கு அவன் மாத்திரம் அங்கே இருந்திருக்கும் பக்ஷத்தில் அவனுக்குச் சரியானவழி சொல்லியிருப்பேன் ஸார். நீங்

களே யோசித்துப் பாருங்கள். இந்தப் பெரியப்படிப்பெல்லாம் படித்து யூனிவர்ஸிடி டிகிரீ வாங்கினவர்கள், மிருகங்கள் மாதிரி நடந்தால் மற்றப் பேர்களை குற்றம் சொல்வதில் என்ன பிரயோஜனம்? (கோபத்துடன்) இவர்களையெல்லாம் நடுத்தெருவில் விட்டு ஜட்காக் குதிரைகளை அடிப்பதுபோல் அடித்தால்தான் புத்திவரும். இவனுக்கே புத்தியில்லாவிட்டால் நிரக்ஷரகுக்ஷியான இவன் தகப்பனுக்குப் புத்தியெங்கே இருந்துவரப் போகிறது? இப்பேர்ப் பட்டவர்களால்தான் ஸார் நமது தேசத்துக்கே நிரம்ப கேவலம் வருகிறது.

அஸி ஜின்:—சரி எனக்கு நேரம் ஆகிறது நான்வருகிறேன் அடுத்த முசாரியில் தங்களைப் பார்க்கின்றேன். (போகிறார்)

அங்கம் மூன்று.

காட்சி இரண்டு.

இடம்:—திருவண்ணாமலை அ. இ. பங்களா ஹால். காலம்:—காலை

கோ:–(யோசித்த வண்ணம்)சீ! இனிமேல் நான் இப்படி யிருப்பது சரியாயில்லை;நேற்றுராத்திரி இன்ஸ்பெக்டர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதுமுதல் என்உயிர் என்னிடத்தில் இல்லை. அவர்சொல்லுவோபது, நான்படித்து என்னபயன்? இதுவரையில் என் தகப்பனார் சொல்லைமீறி நடக்கக்கூடாதென்று எவ்வளவோ பார்த்தேன்.இனிமேல் சாத்தியமில்லை. என்னைப் போலுற்ற உத்தியோகஸ்தர்களுக்கு இந்த விஷயம் தெரிந்தால் என்னை எவ்வாறு மதிப்பார்கள்? இன்றைக்கெல்லாம் ரூபாய் ஆயிரம். அதற்காக நான் என்னுடைய வாழ்நாட்களைக் கவலையிலும் கஷ்டத்திலும் கழிக்க வேண்டியிருக்கிறது. நான் பெரிய உத்தியோகத்தில் இருந்தும் எனக்கு உரியவள் என்கண்முன்னேயே கேவல ஸ்திதியிலிருக்க இனிநான் பார்க்கமாட்டேன். இதுதான் கடைசி முறை. என் தகப்பனாரைக் கண்டிப்பாய்க் கேட்பேன். அவர் இணங்காவிட்டால் அதற்கு வேண்டியவழி நானே செய்து கொள்ளுகிறேன். அண்ணா (சுப்பையர் வருகிறார்)

சுப்பையர்:—என்ன சமாசாரம்? எதற்காககூப்பிட்டாய்?

கோ:— அண்ணா! தாங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. என் ருதுசாந்தி விஷயமாகப் பேசுவதற்காகத்தான்.

சுப்:—நீ யென்னிடம் பேசுவதில் யாதொரு பயனும் இல்லை. உன்மாமனார் ரூபாய் ஆயிரம் அனுப்புகிற வரையில் அது நடக்கப் போகிறதில்லை.

கோ:—அண்ணா! உங்களுக்கு எதற்காக இந்தப் பிடிவாதம்! அந்த ரூபாய்வாங்கி நீங்கள் செலவழித்துக் கொள்ளப் போகிறீர்களா? உங்களுக்கு வேறே ஐவேஜ் கிடையாதா? அவர்கள் ஸ்திதியையாவது கவனிக்க வேண்டாமா? இந்த ரூபாய் ஆயிரமும் நான் நாலு மாதத்தில் சம்பாதிப்பேன். அவர்கள் இப்பொழுது இருக்கப்பட்ட ஸ்திதி உங்களுக்குப் பூராவும் தெரியாததால் இந்தமாதிரி பேசுகிறீர்கள்.

சுப்:—ஆம்! நீ இப்பொழுது பெரிய மனுஷனாய்ப் போய் விட்டாய். உனக்குத்தான் பூரா சமாசாரமும் தெரியும். இனிமேல் இந்த விஷயத்தைப்பற்றி நீ என்னிடம் பேசவேண்டாம். உன் இஷ்டப்படி செய்துகொள். உனக்கும் எனக்கும் அவ்வளவுதான்.

(கோபத்துடன் போகிறார்)

கோ:—இவ்வளவு பிடிவாதம் செய்வர் என்று எனக்கு அப்போதே தெரியும். இருந்தாலும் அவர் சொல்லை மீறிநடக்கவோ எனக்கு இஷ்டம் இல்லை. • பெரியவர்! இதற்கு என்ன செய்யலாம்! (யோசித்து) ஆம்! இதுதான் சரியான யுக்தி. இது அப்பொழுதே தெரியாமல் போய் விட்டதே. (சந்தோஷமாய்) மங்களம்! இனிமேல் நீ ஒருவர்வீட்டிலும் வேலை செய்ய வேண்டிய கஷ்டம் இல்லை. சீக்கிரம் என்னிடம் வந்து சேர்வாய். (போகிறான்)

அங்கம் மூன்று.

காட்சி மூன்று

இடம்:—கள்ளக்குறிச்சியில் நரசிம்மையர் வீடு. காலம்:--காலை

(மங்களம் எதிர்பாராமல் வருகிறாள்)

லட்:—ஏண்டி மங்களம்! இப்படிப் புறப்பட்டு வரேனின்னு ஒரு காகிதமாவது எழுதப்படாதாடி?

நர:—திடீரென்று புறப்பட்டுவந்தாயே! அங்கே ஒன்றும் விசேஷமில்லையே? அங்கே எல்லோரும் செளக்கியந்தானே?

மங்:—எல்லாரும் சௌக்கியந்தான். ஒன்றும் விசேஷமில்லை எனக்கு என்னவோ அங்கே இருக்கப் பிடிக்கவில்லை.

நா:—ஏதோ விசேஷமிருக்கிறது. என்னிடம் ஒளியாமல் சொல்லு.

மங்:—(பேசாமல் நிற்கிருள்)

நா:—ஏன்! என்னிடம் சொல்லக்கூடாதா? இன்ஸ்பெக்டர் ஏதாவது சொன்னுரா?

மங்:—ஐயோ! அப்படி யொன்றுமில்லையே! அவரைத் தெய்வமென்றே சொல்லவேண்டும். பெற்ற பெண்ணைக் காட்டிலும் என்னை பத்துமடங்கு பிரியமாய் நடத்திவந்தார்.

நா:—ஆனுல் நீவரவேண்டியகாரணமென்ன? என்னிடம் சொல்லக்கூடாதென்றுல் உன் தாயாரிடமாவது சொல்லேன்.

மங்:—(அழுது கொண்டு) அண்ணு! உங்களிடத்தில் சொல்லாமல் யாரிடம் சொல்லப்போகிறேன்? எப்படியாவது எனக்கு நல்ல காலம் பிறக்குமென்று இதுவரை பொறுத்திருந்தேன். இனிமேல் அண்ணு! என்னுல் சகிக்க முடியாது.

லட்:—அழுமெச் சொல்லேன், உன்னை யாராவது ஏதாவது சொன்னுளா.

மங்:—ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. இனிமேல் எனக்கு இங்கேயிருக்க இருப்புக்கொள்ளாது. இதுவரையில் எனக்காக நீங்கள் பட்டகஷ்டம் போதும். என்னைமட்டும் நீங்கள் என் புக்ககத்தில் கொண்டு விட்டுவிடுங்கள். அவர்கள் என்னை என்ன செய்தாலும் சரி. என்னை வைத்துக்கொள்ள மாட்டேனென்று விரட்டினுல் அவர்கள் காலின் கீழேவிழுந்து என் உயிரை விடுகிறேன்.

நா:—உனக்குஎன்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா? சரி. உள்ளே போ. (மங்களம் உள்ளே போகிறுள்)

லட்:—(பெருமூச்சு விட்டுக்கொண்டு) இந்தக் கஷ்டம் எப்பொத் தான் விடியுமோ? இப்படியிருந்தா இவளுக்கு இனிமேல் எப்படி சமாதானம் சொல்றது?

(தபால்காரன் கடிதம் கொடுக்கிறான்
அதை லட்சுமி வாங்கி உடைக்கிறாள்)

நா:—இதென்ன லெட்டர்? நமக்கு யார் காகிதம் எழுதப்போகிறார்கள்? (லட்சுமி அம்மாள் ஒரு கடிதமும் நோட்டும் எடுக்கிறாள்) அதென்ன நோட்டா?

லட்:—ஆமா. நோட்டுத்தான். இது யார் காகிதம்?

நா:— (கடிதத்தைப் படிக்கிறார்)

உ

க்ஷேமம் திருவண்ணாமலை

மாமா அவர்களுக்குக் கோபாலன் அநேக நமஸ்காரம். தங்களுடைய நிலைமையைக் குறித்து இத்துடன் ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்று அனுப்பியிருக்கிறேன். இதுவரையில் நான் செய்த பிழைகளைத் தயவுசெய்து மன்னிக்கவும். பணம் அனுப்பிய விஷயம் என் தகப்பனாருக்குத் தெரிய வேண்டாம். அவருக்கு உடனே இதை அனுப்பிவிடுக.

இங்கனம்
கோபாலன்.

(மனைவியைப் பார்த்து) பார்த்தாயா! கோபாலன் எப்போதுமே நல்ல பிள்ளை. நம்முடைய ஸ்திதியென்ன அவனுக்குத் தெரியாதா? பாவம்! என்னசெய்வான் தகப்பனார் மனம் கோணாமலும் நடக்கிறவன்-இருந்தாலும் மாப்பிள்ளைகள் இப்படியல்லவா யிருக்கவேண்டும்!

லட்:—சந்தோஷத்துடன்! அடி அம்மா! இன்னிக்குத்தான் என் கஷ்டம் தீர்ந்தது. வயித்துலே பால் வார்த்தாப்போல் இருக்கிறது. (மங்களத்தை கூப்பிடுகிறாள். மங்களம் வருகிறாள்) மங்களம்! இனிமேல் நீ வருத்தப்பட வேண்டியதில்லை. பெரியவா பண்ணின புண்ணியம் தான். இன்னிக்கோடே ஒன்கஷ்டம் எல்லாம் தீர்ந்து போச்சு.

மங்:—என்னம்மா சமாசாரம்?

நர:—குழந்தாய்! இந்தக்காகிதத்தைப்பார்.

மங்:—(காகிதத்தை எடுத்து படித்துக் கொண்டே சந்தோஷத்துடன் உள்ளே போகிருள்.)

லட்:—சரி. இனிமேல் தாமதிக்கவேண்டாம். சீக்கிரம் பணத்தை சம்பந்திக்கு அனுப்புவதுடன் முகூர்த்தம் வைக்கச் சொல்லியும் எழுதிடுங்கோ.

நர:—அப்படியே செய்கிறேன்.

(போகிருர்கள்.)

அங்கம் மூன்று.

காட்சி நான்கு.

இடம்:—அ. இ. பங்களாவில் படுக்கை அறை. காலம்:— இரவு

(கோபாலன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறுன். மங்களம் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறுள்).

கோ:—மங்களம்! நான் உன்னைச் சில கேள்வி கேட்கப் போகிறேன். வெட்கப்படாமல் சொல்லவேண்டும்.

மங்:—(வெட்கத்துடன்) கேளுங்கோளேன்.

கோ:—அன்று காட்டில் கண்டவுடன் நீ என்னை இன்னுரென்று அறிந்துகொண்டாயோ?

மங்:—உம்

கோ:—உம் என்ருல் அர்த்தம் என்ன?

மங்:—(தாமதித்து) தெரிந்துகொண்டுதான் ஒரு மாதிரியாக பதில் சொன்னேன்.

கோ:—நீ இன்னுரென்று ஏன் என்னிடம் சொல்லவில்லை?

மங்:—எனக்குச்சொல்ல வெட்கமாயிருந்தது. ஏனென்ருல் பக்கத்தில் யார் யாரோ இருந்தார்கள்.

கோ:—அது போகட்டும். நீ போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டில் வேலைக்கு அமர்ந்தாயே? உன் எண்ணம் என்ன?

மங்:—அந்தப்பேச்சு இப்போது என்னத்திற்கு? அதையெல்லாம் நினைக்கும் பொழுது எனக்கு வருத்தமாயிருக்கிறது.

கோ:—இப்பொழுதென்ன வருத்தம்? எல்லாந்தான் தீர்ந்து போய் விட்டதே? எனக்குத் தெரியக் கூடாதா? வெட்கப்படாமல் சொல்?

மங்:—என் எண்ணமா? வீட்டிலோ தாயார் தகப்பனார் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களால் ஆயிரம் ரூபாய் கொடுக்கமுடியாது. எனக்கோ தங்களிடத்தில் வர அதிக ஆவல். என்ன செய்கிறது?

கோ:—அதற்காக வேலைசெய்து சம்பாதிக்கலாம் என்று எண்ணையோ?

மங்:—ஆம்! பொய் சொல்லக்கூடாது. திருடக்கூடாது. கெட்ட நடவடிக்கைகள் செய்யக்கூடாது. வேலை செய்து பிழைத்துத் தங்களுக்குச் செலுத்தவேண்டியதைச் செலுத்துவோம் என்று வேலைக்கு அமர்ந்தேன். இதில் என்ன குற்றம்?

கோ:—வாஸ்தவம்தான்! குற்றமில்லை. உனக்குச் சம்பளம் ஐந்து ரூபாய்தானே? எப்படி ஆயிரம் ரூபாய் கொடுப்பாய்?

மங்:—ஏன் முடியாது? தங்களிடத்தில் உண்டான பிரேமையினால் எப்படியாவது ஆயிரம் ரூபாய் சேர்க்கத்தான் வேண்டுமென்று எண்ணம். இப்பொழுது சொல்லக்கூட வெட்கமாயிருக்கிறது. இன்ஸ்பெக்டர் அவர்கள் நூற்றைம்பது ரூபாய் கொடுத்தார்கள். ஒரு வருஷத்தில் இவ்வளவு கிடைத்தால், ஏன்! பத்து வருஷத்தில் ஆயிரம் சேர்த்து விடக்கூடாது? பணம் சேர்ந்தவுடன் நானும் உயிருடன் இருந்தால் தங்களிடத்தில் அப்பாவைக் கொண்டு ஆயிரம் ரூபாய் கொடுக்கச்சொல்லி சந்தோஷமாய் இருக்கலாமென்றுதான்.

கோ:—நீ வருகிறவரை நான் காத்துக்கொண்டிருக்காமல் வேறே கலியாணம் செய்து கொண்டிருந்தால் என்ன செய்வாய்?

மங்:—தாங்கள் இட்ட வேலையைச் செய்து கொண்டு உங்கள் முகத்தையாவது பார்த்துக் கொண்டிருப்பேன்.

கோ:—நான் இருக்கக்கூடாதென்று சொல்லிவிட்டால்?

மங்:—ரூபாய் ஆயிரத்தையும் தங்களிடம் கொடுக்கச் சொல்லி நான் என் ஆசைதீர ஒருதரம் தங்களை பார்த்து உடனே உயிர் விடுவேன். அதே என் தீர்மானம்.

கோ:—(மங்களத்தை கட்டி முத்தமிட்டு) என் கண்ணே! நான் உன்னை ஒரு நாளும் அப்படிச்செய்ய விடமாட்டேன். நீ போலிஸ் இன்ஸ்பெக்டர் வீட்டில் வேலை செய்கிறதை பார்த்தது முதல் என் உயிர் என்னிடத்திலில்லை. நீ என்னுடனிருந்து சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று உடனே பணம் அனுப்பினேன்.

மங்:—எனக்கு அப்பொழுதே தெரியும்!

கோ:—உலகெலாம் படைத்த ஒருதனி முதல்வன், அலகிலா விளையாட்டு அற்புதம் என்னே! மணி பத்து ஆய்விட்டது. அந்தப் பாலை எடு.

மங்களம்.

176138
சென்னை-600 008.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த

ஸ்ரீமத் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் B. A. அவர்கள் இயற்றிய

தமிழ்நூல்கள்.

தமிழ்மொழியின் வரலாறு:—இது தமிழ்ப் பாஷையின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, வேறுபாடு, சரித்திரமுதலியன கூறும் ஓர் அரியநூல். தமிழர் எவருக்கும் இன்றியமையாதது. (கலிகோ கட்டடம்) விலை ரூ. 2-0-0.

ரூபாவதி அல்லது காணாமற்போன மகள்:—ஐந்து அங்கமுள்ள ஓர் நவீன நாடகம். ஆடவர், பெண்டிர், அனைவரும் எளிதில் வாசித்துணரத்தக்கது. விலை ரூ. 1-0-0.

மானவிஜயம்:—அங்கம் என்னும் அவலச் சுவை வாய்ந்த ஓர் தமிழ்நாடகம். முழுதும் செய்யுளாகவே இயன்றுளது. இதன் விலை அணா 0-8-0.

நாடகவியல்:—ஓர் நாடகத்தமிழ் இலக்கண நூல். நாடகாசிரியர்க்கு மிகவும் இன்றியமையாதது. 272 சூத்திரங்களிலியன்றது. பி. ஏ. பரீக்ஷைக்குப் பாடமானது. விலை அணா 0-3-0.

தனிப்பாசுரத்தொகை — 41 தனிப்பாசுரங்கள் அடங்கிய தோர் உறுதி நூல். விலை அணா 0-4-0.

டீ ஜி. யு. போப் ஐயரவர்களால் ஆங்கிலபாஷையில் செய்த செய்யுட்களும் சேர்ந்தது. (கலிகோகட்டடம்) விலை ரூ. 1-0-0.

பாவலர் விருந்து:—பண்டிதரும், பாமரரும் படித்துணர்ந்து பயன்பெறத்தக்கது. விலை அணா 0-3-0. (கலிகோகட்டடம்) ரூ. 1.

மணியசிவனார் சரித்திரம்:—ஓர் மகானன யோகீசுரரது சரித்திரம். விலை அணா 0-2-0.

மதுரை மாலை (மதுரைச் சபாபதி முதலியார் இயற்றியது) விலை அணா 0-1-6.

சிறுவர்க்காகும் கதைப்பூங்கொத்து:—இது கதாகுஸுமமஞ்சரி என்னும் வடநூலின் மொழிபெயர்ப்பு. சிறியோர், பெரியோர், ஆடவர் பெண்டிர் அனைவரும் படித்து மகிழத்தக்கது. மாணவர்க்கும், உபாத்தியாயர்க்கும் இன்றியமையாதது. காலஞ்சென்ற ஸ்ரீமாந் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் B. A. அவர்களின் குமாரர் வி. சூ. நடராஜ சாஸ்திரியார் எழுதியது. விவேகோதயத்தினின்றும் பிரசுரித்தது விலை அணா 0-2-6.

குறிப்பு:—வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் தரக்கூடும்.

பரிதிமாற்கலைஞன் புத்தகசாலை,

735. காக்காத்தோப்புத்தெரு மதுரை.

Copies can be had of

Messrs.,

1. **V. Kathirvadivelmurugaiya,**
12. Rengasami Servai Lane, Madura.

2. G. **Subramania Aiyer,**
Kakkatope Street, Madura.

3. C. N. S. & Co., (*The Cheapest House for Watches & Fountainpens etc.*)
460. Vengalakadai Street, Madura.